பாட்டாளி சிந்தனை

Volume 26 No. 4

சோசலிஸ்ட் யூனிடி சென்டர் ஆஃப் இந்தியா

SUCI

December 2015

தமிழ்நாடு மாநில அமைப்புக் கமிட்டியின் மாத இதழ்

விலை ரூ 3

# தமிழ்நாட்டில் மழை மற்றும் வெள்ளத்தால் ஏற்பட்டுள்ள பாதிப்புகள் குறித்து எஸ்யுசிஐ (கம்யூனிஸ்ட்) கட்சியின் அறிக்கை

*வடகிழக்கு பருவமழையால் ஏற்பட்டுள்ள பாதிப்புகளுக்கு உரிய நிவாரணம் கோரி எஸ்யுசிஐ (கம்யூனிஸ்ட்) கட்சியின் தமிழ்நாடு மாநில அமைப்புக் கமிட்டி 20.11.2015 அன்று வெளியிட்ட அறிக்கை:*

வடகிழக்கு பருவமழையால் தமிழக கடலோர மாவட்டங்களில் குறிப்பாக கடலூர், விழுப்புரம், சென்னை, திருவள்ளூர், காஞ்சிபுரம், திருவண்ணா மலையின் சில பகுதிகள் கடுமையாக பாதிக்கப் பட்டுள்ளன. மழையால் நூற்றுக்கும் மேலானோர் இறந்து உள்ளனர். இம்மாவட்டங்களில் அடித்தட்டு மக்களும் விவசாயிகளும் அன்றாட வாழ்க்கை மற்றும் வாழ்வாதாரங்களை இழந்து நிற்கின்றனர். சென்னை நகரம் உள்ளிட்ட பல்வேறு நகர்ப்புற நடுத்தர மக்களின் வீடுகளும் அடுக்குமாடி குடியிருப்புகளும் கூட பல்வேறு ஏரிகளின் உடைப்பால் நீரால் சூழப்பட்டு தீவுகளாக காட்சி யளிக்கின்றன. நகரின் குடிசைவாழ்ப் பகுதி மக்களின் அவலம் விவரிக்க இயலாதவண்ணம் இருக்கின்றது. கடலூர் மாவட்டத்தில் 46,000 மக்களும் திருவள்ளூர் மாவட்டத்தில் 36,000 மக்களும் முகாம்களில் தங்க வைக்கப் பட்டுள்ளதாக அரசு தரப்பே கூறுகின்றது. உண்மையில் பல இலட்சக்கணக்கானோர் இருப்பிடமின்றி தவிக்கின்றனர். மாநிலத்தின் வேறு பல மாவட்டங்களிலும் மழை வெள்ளத்தின் சேதாரங்கள் செய்திகளில் வந்தவண்ணம் இருக்கின்றன. எடுத்துக்காட்டாக, நாகப்பட்டினம், திருவாரூர் ஆகிய டெல்டா மாவட்டங்களில் விவசாய நிலங்கள் நீரில் மூழ்கியுள்ளன. ஏற்காடு நீலகிரி பகுதிகளில் சாலை உடைப்புகள் நிலச் சரிவுகள் நடந்துள்ளன. பருவ மழைக்காலம் இன்னமும் முடிந்து விடவில்லை என்பதும் கவனத்தில் கொள்ளவேண்டியுள்ளது.

இச்சூழ்நிலையின் பின்னணியில் பாதிக்கப்பட்ட மக்களின் துயர் துடைக்கும் விதத்தில் மாநில அரசாங்கம் உரிய நிவாரண நடவடிக்கைகளை எடுக்கவேண்டும் என எஸ்யுசிஐ (கம்யூனிஸ்ட்) கோருகின்றது. கீழ்கண்ட நடவடிக்கைகளையும் முன்மொழிகின்றது.

1. பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு குடிநீர், உணவு, மருத்துவமுகாம், மாற்று குடியிருப்பிடம் மற்றும் மின்சாரம், சாலைவசதி உடனடியாக வழங்க வேண்டும். உடைகள், போர்வை, படுக்கை வசதிகளை வழங்கவேண்டும். நோய்ப் பரவலைத் தடுக்க தடுப்பூசி போடுதல், மருந்து தெளிப்பு போன்ற நடவடிக்கைகளோடு உயிர்க்காக்கும் மருந்துகள் கிடைப்பதை உறுதி செய்ய வேண்டும். மருத்துவ முகாம்களை அமைத்து ஒவ்வொன்றிலும் மருத்துவர், செவிலியர் மற்றும் உதவியாளர்களுடன் போதிய நாட்கள்வரை இயக்கப்பட வேண்டும்.

2. மழையினால் உயிரிழந்தோர் குடும்பங்களுக்கு போதிய இழப்பீடுகளை உடனடியாக வழங்க வேண்டும்.

3. பாதிக்கப்பட்ட நெல், வாழை, கரும்பு மற்றும் பிற பயிர்களை போட்டுள்ள விவசாயிகளுக்கு உரிய நஷ்டஈடுவழங்க வேண்டும். தினக்கூலி, கட்டுமானத் தொழில், சிறு குறு வியாபாரம் மற்றும் தொழில் செய்வோரும் மழையால் வருமானம் இழந்துள்ளனர். அவர்களுக்கும் உரிய இழப்பீடு வழங்க வேண்டும்.

4. அத்தியாவசிய உணவுப்பொருட்களின் விலையேற்றத்தை தடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

5 ஏரி, கண்மாய்களை ஆழப்படுத்தி கடலில் வீணாகக் கலக்கும் நீரை தடுத்து நிறுத்தி நிலத்தடி நீர் வருடம் முழுவதும் கிடைக்க ஏற்பாடு செய்ய வேண்டும். வடிகாலுக்கான நீர்வழிப்பாதைகளை சரி செய்ய வேண்டும்.

# நாடு முழுவதும் மதவாதத்திற்கெதிரான இயக்கத்தினை வளர்த்தெடுக்கக் கோரி இடதுசாரி கட்சிகளுக்கு தோழர் பிரவாஸ் கோஷ் அவர்கள் கடிதம்

15.10.2015

பெறுநர்

**பொதுச்செயலாளர் அவர்கள்,**

**சிபிஐ(எம்), சிபிஐ, சிபிஐ (எம் எல்) லிபரேசன், ஆர்எஸ்பி மற்றும் பார்வர்டு பிளாக்**

அன்புள்ள தோழரே,

அதிர்ச்சியூட்டும் தாத்ரி படுகொலை, டாக்டர் தபோல்கர், கோவிந் பன்சாரே, டாக்டர் கல்புர்கி போன்ற புகழ்மிக்க பகுத்தறிவாளர்களின் படு கொலை, இதர பகுத்தறிவாளர்கள் மீது தொடர்ந்து வரும் மிரட்டல், திட்டமிடப்பட்டிருந்த பிரபல பாகிஸ்தான் பாடகர் குலாம் அலியின் கஸல் பாடல் நிகழ்ச்சியை ரத்துசெய்ய நிர்ப்பந்தப்படுத்தியது, அதிகரித்துவரும் கல்வி மற்றும் கலாச்சாரத்தை காவிமயப்படுத்தும் முயற்சி போன்ற பெருமளவில் தொடர்ந்துவரும் சமீபத்திய நிகழ்வுகள், இந்து மதவாத ஆர்எஸ்எஸ் – பாஜக சிவசேனா – சங்க பரிவாரங்கள் மதரீதியில் சமூகசூழலை பதட்டத்துடன் வைத்திருக்கவும் பல்வேறு மதத்தைச்சார்ந்த பல மொழிபேசும் சமூகத்தவர்கள் மத்தியில் பிளவினை மேலும் அதிகரிக்கவும் ஜாதிக்கலவரத்தை மத வெறிவாதத்தை தூண்டி கொழுந்துவிட்டெரிய வைத்திடவும், கல்வியின் சாராம்சத்தை பறித்திடவும், பிற்போக்கு பழமைவாத மூட எண்ணங்களை, மதவெறியுணர்வை ஊக்குவித்திடவும், சமூகத்தில் நிலவும் மதச்சார்பின்மை கட்டமைப்பினை அழித் தொழித்திடவும் நாட்டை மேலும் பாசிசமயப் படுத்துவதுமான அவர்களது முயற்சி பகுத்தறிவு சிந்தனை மற்றும் விஞ்ஞான முறையிலான சிந்தனைப் போக்கை மழுங்கடிக்கச் செய்ய எவ்வாறு முனைப்புடனிருக்கின்றன என்பதையே காட்டுகிறது. இந்த அறிகுறியானது மிகப்பெரும் பேராபத்தை விளைவிக்கக்கூடியதாக இருப்பதால் இதற்கெதி ரான உடனடி தடுப்பு நடவடிக்கைகளை மேற் கொள்ள வேண்டியது அவசியமாயிருக்கின்றது.

இடதுசாரிக் கட்சிகள் அடிமட்ட அளவில் ஒன்றிணைந்து நாடு முழுவதும் மதவாதத்திற் கெதிரான சக்திவாய்ந்த இயக்கங்களை கட்ட விழ்த்துவிட்டால் மட்டுமே இவ்வபாயத்தை தடுத்து நிறுத்த முடியுமென நாங்கள் உறுதியாக நம்புகிறோம். எவ்வளவு விரைவாக முடியுமோ அவ்வளவு விரைவாக போராட்டங்களைத் துவக்க திட்டங்களை வகுத்தெடுக்க ஆறு இடதுசாரி கட்சிகளின் ஒரு கூட்டத்தை உடனடியாக ஏற்பாடு செய்ய வேண்டு மென நாங்கள் முன்மொழிகிறோம்.

வாழ்த்துக்களுடன்,

தங்கள் உண்மையுள்ள,

**பிரவாஸ் கோஷ்**

*பொதுச்செயலாளர்*

*எஸ்யுசிஐ (கம்யூனிஸ்ட்)*

மேற்கண்ட நமது கடிதத்தினைத்தொடர்ந்து கடந்த அக்டோபர் மாதம் 31ஆம் நாள் மாலையில் சிபிஐ(எம்) பொதுச்செயலாளர் தோழர் சீதாராம் யெச்சூரி மற்றும் எஸ்யுசிஐ (கம்யூனிஸ்ட்) கட்சியின் அரசியல் தலைமைக்குழு உறுப்பினர் தோழர் கிருஷ்ண சக்கரவர்த்தி ஆகியோருக் கிடையிலான கூட்டமொன்று நடைபெற்றது. அதில் எஸ்யுசிஐ (கம்யூனிஸ்ட்) கட்சியின் பொதுச்செயலாளர் தோழர் பிரவாஸ் கோஷ் அவர்களின் கடிதம் கிடைக்கப்பெற்றதாகவும் அதில் இந்த அச்சுறுத்தலுக்கெதிராக உடனடியாக ஓர் ஒன்றுபட்ட வலிமை மிக்கதோர் போராட்டத்தை நடத்திடும் பொருட்டு தோழர் பிரவாஸ் கோஷ் தெரிவித்திருந்த கருத்துக்களுடன் தான் முழுவதும் ஒத்துப்போவதாகவும் தோழர் யெச்சூரி அவர்கள் தெரிவித்தார். இந்த அவசியத்தேவையை நிறைவேற்றிட இவ்விஷயம் குறித்து விவாதித்திட இடதுசாரி கட்சிகளின் கூட்டம் விரைவில் ஏற்பாடு செய்யப்படுமெனவும் மேலும் தெரிவித்திருந்தார்.

# ஓர்க்கர்ஸ் வொர்ல்டு பார்ட்டி மாநாட்டிற்கு எஸ்யுசிஐ (கம்யூனிஸ்ட்) கட்சியின் வாழ்த்துச் செய்தி

அமெரிக்க ஐக்கிய நாட்டின் ஓர்க்கர்ஸ் வொர்ல்டு பார்ட்டியின் தேசிய மாநாடு நடைபெறும் இவ்வேளையில் எனது கட்சியாகிய எஸ்யுசிஐ (கம்யூனிஸ்ட்) கட்சியின் சார்பாக நான் எனது நெஞ்சார்ந்த புரட்சிகர வாழ்த்துக்களை இக்கடிதத்தின் வாயிலாக தெரிவித்துக்கொள்கிறேன். மேலும் உங்களது மாநாடு வெற்றியடையவும் உங்களது இயக்கங்கள் வளர்ச்சி பெறவும் எனது மேலான வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்கிறேன். ஓர்க்கர்ஸ் வொர்ல்டு பார்ட்டியானது அமெரிக்க ஐக்கிய நாட்டில் சோசலிசப் புரட்சியினை கொண்டு வர போராட்டங்களை கட்டியெழுப்ப உறுதி பூண்டுள்ளது. மக்களுக்காக போராடவும் அனைத்து தடைகளையும் மீறி அமெரிக்க மண்ணில் உழைக்கும் வர்க்கத்தின் போர்க்குணமிக்க போராட்டங்களை கட்டியெழுப்பவும் நீங்கள் மேற்கொள்ளும் முயற்சியை நாங்கள் போற்றுகிறோம். வரும் ஆண்டில் ஒரு புதிய ஜனாதிபதியை தேர்ந்தெடுத்திட தங்களது நாடே மும்முரமாக ஈடுபட்டுக் கொண்டிருக்கையில் உங்களது மாநாடு நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

பராக் ஒபாமா ஜனாதிபதியாக தேர்ந்தெடுக்கப் பட்டபோது என்றும் காணாத பொருளாதார சீர்குலைவும் நியாயமற்ற தலையீடு மற்றும் ஆக்கிரமிப்புப் போர்களினால் அமெரிக்காவில் சூழ்ம்பிக்கொண்டிருக்கிற, சூழப்பட்ட குடிமக்கள் பலர் முதல் ஆப்பிரிக்க–அமெரிக்க அதிபரின் புதிய நிர்வாகத்தின்கீழ் அவர்களது பொருளாதார ரீதியிலான துயரத்திலிருந்து சற்று மீள முடியுமென்றும் சர்வதேச அமைதியினை நோக்கிய பாதையில் முன்னேற்றமும் அமெரிக்காவின் போர்க் கொள்கையில் தலைகீழ் மாற்றம் ஏற்படுமெனவும் பெரும் நம்பிக்கை கொண்டிருந்தனர். ஆனால், அதன் பின்பு நடந்த நிகழ்வுகள் அனைத்து நம்பிக்கைகளையும் பொய்ப்பித்துவிட்டன.

பொருளாதார ரீதியிலான ஸ்திரமற்ற தன்மையின் விளைவுகள் மேலும் தொடர்ந்து தீவிரமடைந்தது. கடும் வறுமை ஏற்பட்டு, பரந்துபட்ட மக்கள் பொருளாதார சீரழிவினை எதிர்கொண்டனர். இந்த அமைப்பானது, பொருளாதார நெருக்கடியினை கட்டுப்படுத்திட ஆயேதும் காணமுடியவில்லை. மாறாக, அந்நெருக்கடியின் சுமை முழுவதும் தொழிலாளர்கள், ஒடுக்கப்பட்ட மற்றும் ஏழைகளின் முதுகின்மேல் ஏற்றப்பட்டது.

தீவிர கலாச்சார ஒழுக்க சீரழிவு சமூகத்தினுள் ஊடுருவி அறநெறியொழுக்க மதிப்புகளை அழித்தொழித்து, குறிப்பாக கணிசமான பிரிவு இளைய தலைமுறையினரை மனிதப்பண்பற்றவர்களாக ஆக்கிவிட்டது. இதன் ஓர் வெளிப்பாடுதான் கல்வி நிறுவனங்களில் அடிக்கடி நிகழும் படுபயங்கர கொத்துகொத்தான படுகொலைகள். மக்களிடம் அதிருப்தி அதிகரிக்கையில், அரசு இயந்திரம் மேலும் மேலும் அடக்குமுறையை கையாளுகின்றது. ஆப்பிரிக்க அமெரிக்கர்கள் மற்றும் குடிபெயர்ந்தவர்கள் இனப்பாகுபாட்டிற்கு தொடர்ந்து உள்ளாக்கப் பட்டுக்கொண்டிருக்கின்றனர். அவர்களை கொல்வது உள்ளிட்ட அவர்களுக்கெதிரான போலீஸின் குரூரமான தாக்குதல் சம்பவங்கள் அதிகரித்துள்ளன.

இரண்டாம் உலகப் போருக்குப் பின்னால், பொருளாதார பலம் அமெரிக்காவை ஒரு கடன் தரும் தேசமாக வைத்திருந்தது. ஆனால், அங்கு செல்வமும் செழிப்பும் இருந்த போதிலும் அது இன்று உலகத்திலேயே மிகவும் கடனாளியாகியுள்ள நாடாக வெளிப்படையாக விளங்குகிறது. நிலவும் தீவிர பொருளாதார நெருக்கடியானது பொருளாதாரத்தை முழுமையாக தீவிர ராணுவமயப்படுத்த அமெரிக்காவை நிர்ப்பந்தப்படுத்தியிருக்கிறது. ஆயுதங்களை தயாரிப்பதும் விற்பனை செய்வதும்தான் அதன் தலையாய நோக்கமாக இருக்கின்றது. இதன் படுபாதக விளைவாக ராணுவத் தளவாடங்கள் இஸ்லாமிய அடிப்படைவாதிகளுக்கு சென்றடைந்து பல்வேறு நாடுகளில் பயங்கரவாத செயல்களுக்கு பயன்படுத்தப்படுகிறது.

ஒபாமா நிர்வாகமானது ஆப்கானிஸ்தான், ஈராக் மற்றும் மத்திய கிழக்கு நாடுகளின் மீதான ஆக்கிரமிப்பு போரில் சண்டையிட அதிக எண்ணிக்கையில் படைகளை அனுப்ப தீர்மானித்துள்ளது. அமெரிக்காவும் அதன் ஏகாதிபத்திய கூட்டாளிகளும் ஏகாதிபத்திய எதிர்ப்பு நிலைபாடு கொண்டிருக்கும் அனைத்து நாடுகளையும் போர் மற்றும் உள்நாட்டு சதி மூலம் நிலைகுலையைச் செய்திடவும் அப்பகுதிகளில் ஜனநாயக இயக்கங்களை அழித்தொழித்திடவும் தீவிரமாயிருக்கின்றன. அமெரிக்க ஏகாதிபத்தியம் போலியான காரணங்களை கூறிக்கொண்டு நேரடி ஆக்கிரமிப்புகளில் ஈடுபடுவது மட்டுமின்றி, மதரீதியிலான குறிப்பாக ஓசாமா பின்லேடன், அல் கொய்தா, தலிபான், ஐஎஸ்ஐஎஸ் இன்னும் இது போன்ற இஸ்லாமிய அடிப்படைவாதிகளை தூண்டி, பலப்படுத்தி அம்மதத்திற்குள்ளாகவே மோதல்களை ஏற்படுத்தி வருகின்றது.

இராக் நாடு சின்னாபின்னமாக்கப்பட்டு அந்நாடு இப்போது உள்நாட்டுப்போரினால் ரத்தம் சிந்திக் கொண்டிருக்கின்றது. அங்கே ஐஎஸ்ஐஎஸ் அமைப்பு வன்முறை வெறியாட்டம் போட்டுக்கொண்டிருக்கின்றது. நேட்டோ – அமெரிக்க ராணுவ தலையீடு மூலம் லிபியா எதேச்சதிகாரமிக்க அராஜக அரசாக மாற்றப்பட்டுவிட்டது. அமெரிக்காவானது கலகக் காரர்களுக்கு ஆயுத உதவி அளித்து வெளிப்படையாகவே உள்நாட்டுப்போரை தூண்டிவிட்டதன் மூலம் இதுபோன்ற போர்க்காட்சிகள் சிரியாவிலும் நீண்டுள்ளது. அணு ஆயுத பிரச்சினை என்ற பெயரால் அமெரிக்கா ராணுவ ரீதியில் வட கொரியாவை அச்சுறுத்தி வருகின்றது. உலகத்தின் மூலை முடுக்குகளிலெல்லாம் அமெரிக்கா தனது பலம்வாய்ந்த ஆயுத தந்திரங்கள் மற்றும் அடாவடித்தனத்தை அப்பட்டமாக வெளிக்காட்டி வருகின்றது.

இரண்டாம் உலகப்போருக்கு பின்பு பாசிச சக்திகளின் வலிமைமிக்க ராணுவ பலத்தை யெதிர்த்த ஸ்டாலின் தலைமையிலான சோவியத் யூனியனின் மாபெரும் வெற்றியினால் ஏகாதிபத்தியம் ஓரங்கட்டப்பட்டு, பலவீனமடைந்தது. கிழக்கு ஐரோப்பிய நாடுகளில் மக்கள் ஜனநாயக புரட்சி வெற்றிபெற்று காலனி மற்றும் அரைக்காலனி நாடுகளில் விடுதலை போராட்டங்கள் முன்னேறிச் சென்றிடவும் சீனாவிலும் வடகொரியாவிலும் வியட்நாம் மற்றும் கியூபாவில் மக்கள் ஜனநாயகப் புரட்சியானது மலர்வதற்கானதோர் சூழ்நிலைமை ஏற்படுத்தப்பட்டது. இவ்வாறாக உலக ஏகாதிபத்திய – முதலாளித்துவ முகாமிற்கிணையான ஓர் சக்திவாய்ந்த ஏகாதிபத்திய எதிர்ப்பு போர் எதிர்ப்பு சோசலிச முகாமானது தோன்றியது.

இப்புதிய நாகரீகம் உலகம் முழுவதிலுமுள்ள ஒடுக்கப்பட்ட மற்றும் சுரண்டப்படும் மக்களை ஈர்த்தது மட்டுமில்லாமல், பல்வேறு நாடுகளிலுள்ள விடுதலை போராட்ட தலைவர்கள் மற்றும் 20ஆம் நூற்றாண்டின் மாபெரும் மனிதவியலாளர்களிடம் ஓர் உயர்ந்த அபிமானத்தை பெற்றது. மேலும் ஸ்டாலின் அவர்களையும் சோசலிசத்தையும் அவர்கள் வெகுவாகப்பாராட்டினர்.

ஆனால் ஸ்டாலின் மறைவிற்குப்பின் திருத்தல்வாதத்தின் வீச்சானது சோவியத் கட்சியை பீடித்து கட்சி மற்றும் சோவியத் நாட்டின் தலைமையை திருத்தல்வாதிகள் கைப்பற்றினர். ஸ்டாலின் அவர்கள் ஒரு மார்க்சிச–லெனினிச அத்தாரிடியாக விளங்கியதால் அதனை பலவீனப்படுத்திட துவேஷமான அவதூறு பிரச்சாரத்தை துரோகி குருச்சேவ் கட்டவிழ்த்து விட்டார். இது சோவியத் யூனியன், பிற சோசலிச நாடுகள் மற்றும் உலக கம்யூனிச இயக்கங்களுக்கு பெரும் சேதத்தை ஏற்படுத்தியது. கட்சி, தொண்டர்கள் மற்றும் மக்களின் பின்தங்கிய தத்துவார்த்த – கலாச்சார தரத்தினை சாதகமாக பயன்படுத்திக்கொண்டு அவர்கள் மெல்ல மெல்ல சோசலிச அடித்தளத்தை தகர்த்தெறிந்து முதலாளித்துவத்தை மீண்டும் கொண்டுவந்தனர்.

ஐயத்திற்கிடமின்றி உழைக்கும் வர்க்கத்தின் புரட்சியானது குருச்சேவ், பிரஸ்நேவ், கோர்பச்சேவ் போன்ற திருத்தல்வாத மற்றும் ஓடுகாலிகளின் நம்பிக்கை துரோகத்தினால் ஒரு தற்காலிக பின்னடைவை சந்தித்திருக்கின்றது. ஏகாதிபத்தியத்திற்கு ஒரு புத்துயிர் கிடைக்கப்பெற்று, ஏகாதிபத்தியவாதிகள் இனி முதலாளித்துவம் எவ்வித எதிர்ப்புமின்றி நடைபோடுமென எண்ணினார்கள். அவர்கள் சோசலிசம் மாண்டு புதைக்கபட்டு விட்டதெனவும் மார்க்சிசம் ஓர் தோல்வியுற்ற சித்தாந்தம் எனவும் வெளிப்படையாக அறிவித்தனர். ஆனால் இத்தகைய பேச்சுக்கள் வெறுமனே அபத்தம் மற்றும் அவதூறுகளேயென்பதை அம்பலப்படுத்தி, எங்கும் வியாபித்திருக்கின்ற பொருளாதார, கலாச்சார மற்றும் சமூக நெருக்கடியானது முற்றிலும் அழுகிப்போன முதலாளித்துவ அமைப்பையும் அது தப்பிக்கவியலாத விஷச்சுழலில் சிக்கிக்கொண்டு, மூச்சுத்திணறும் நிலைமையிலிருப்பதனை தோலுரித்துக்காட்டியது.

ஏகாதிபத்தியவாதிகளின் ஒற்றைதுருவமயம் எனும் கோட்பாடு கானல் நீராகி, உலகமயம் தாராளமயம் என்ற அவர்களது முன்மொழிவுகள் முதலாளித்துவ பொருளாதாரத்தை நெருக்கடியிலிருந்து மீட்டெடுப்பதில் தோல்வியுற்று, அவர்களது நாப்டா, சாப்டா, செப்டா, காட் போன்ற வர்த்தக ஒப்பந்தங்களும்கூட பலனேதும் கொடுக்கவில்லை. தற்போது புதிதாக, 'ட்ரான்ஸ் பசிபிக் பார்ட்னர்ஷிப்' மற்றும் 'ட்ரான்ஸ் அட்லாண்டிக் ட்ரேட் அண்ட் இன்வெஸ்ட்மெண்ட் பார்ட்னர்ஷிப்' ஆகிய இரண்டு ஒப்பந்தங்கள் போட திட்டமிடப் பட்டிருக்கின்றன. ஆனால் இவைகளும்கூட மற்றவைகளைப்போன்று தோல்வியுற்றே தீரும். ரஷ்யா மற்றும் சீனாவை எதிர்கொள்ள அமெரிக்காவானது பொருளாதார உறவுகளை ஏற்படுத்திக்கொள்வது மட்டுமின்றி ஜப்பான், ஆஸ்திரேலியா, மற்றும் ஏகாதிபத்திய சக்தியாக இருக்கும் இந்தியாவுடனும்கூட ராணுவ கூட்டை ஏற்படுத்திக் கொண்டுள்ளது. அது நிச்சயமாக இப்பகுதியில் பதட்டத்தை அதிகரிக்கவே செய்யும்.

முதலாளித்துவ நாடுகளில் சுரண்டலால் அழுத்தப் பட்டுக்கொண்டிருக்கும் பொதுமக்கள் தற்போது ஏற்பட்டிருக்கும் நெருக்கடியால் தானாக வெடித்தெழுந்து யுஎஸ்ஏ, ஐரோப்பா மற்றும் பிற நாடுகளில் மிகப்பெரும் போராட்டங்கள் மூலம் இந்த முதலாளித்துவ ஆட்சிக்கு ஓர் முடிவு கட்ட வேண்டுமெனும் கோரிக்கையை முன்வைக் கின்றனர். ஆனால், அவர்களை வழிநடத்திச் செல்ல சரியான தலைமை இல்லாததால், அத்தகைய போராட்டங்கள் பின்வாங்கிச் செல்கின்றது. தன்னிச்சையாக வெடித்தெழும் அத்தகைய போராட்டங்கள் சரியான புரட்சிகர தலைமை இல்லாத காரணத்தால், ஒன்று பிசுபிசுத்துப் போய் விடுகின்றன அல்லது எதிரியின் கைகளுக்குச் சென்றுவிடுகின்றன.

ஓர் புரட்சிகர கட்சியின்றி புரட்சியேதும் ஏற்பட்டுவிட முடியாது என்ற லெனினது படிப்பினைகளை நாங்கள் நினைவுபடுத்தி பார்க்கின்றோம். சோவியத் ரஷ்யாவிலும் கிழக்கு ஐரோப்பிய நாடுகளிலும் சோசலிசம் வீழ்ச்சியடைந்தது எங்களுக்கு பெரும் வேதனையளிக்கின்றது என்பதில் சந்தேகமில்லை. ஆனால் சில மாதங்கள் மட்டுமே நிலைத்திருந்த "பாரிஸ் கம்யூன்" என்றழைக்கப் படுகின்ற உழைக்கும் வர்க்கத்தின் முதல் எழுச்சியினையும் அது விட்டுச்சென்ற மதிப்பிற்கரிய பாடங்கள் மார்க்சிசத்தை செழுமைப்படுத்தியதையும் அவைகளை லெனின் அவர்கள் படைப்பாற்றலுடன் பிரயோகித்ததையும் நாங்கள் நினைவுபடுத்திப் பார்க்கின்றோம்.

இதனைப்போன்றே சோவியத் ரஷ்யாவிலும் பிற நாடுகளிலும் சோசலிசப்புரட்சிக்கு ஏற்பட்ட பின்னடைவானது சரியாகப் புரிந்துகொண்டு, ஓர் புரட்சியினை கொண்டுவரவும் முதலாளித்துவத்தை மீட்டெடுக்க நடைபெறும் முயற்சிகளை தோற்கடிக்கவும் மதிப்புவாய்ந்த படிப்பினைகளை உழைக்கும் வர்க்கத்தின் இயக்கங்கள் விட்டுச் சென்றிருக்கின்றது. இத்தருணத்தின் தலையாய தேவையை கருத்தில் கொண்டு எதிர்வினையாற்றி, முதலாளித்துவ தாக்குதல்களை அனைத்து நாடுகளிலும் முறியடித்து புரட்சிகர பாட்டாளி வர்க்க இயக்கங்கள் வலுப்பெற்றிடும் என நம்புகின்றோம். இத்தகைய சூழ்நிலைமையில் அமெரிக்காவில் வெகுஜன இயக்கங்களைக் கட்டியெழுப்பி அவற்றை வழிநடத்திட ஓர்க்கர்ஸ் வொர்ல்டு பார்ட்டி ஆற்றிக்கொண்டிருக்கும் பங்கினை நாங்கள் பாராட்டுகின்றோம்.

உங்களது தேசிய மாநாடு தனது உட்கருவாக "சோசலிச புரட்சியினை முதற்கடைமையாக எண்ணுதல்" என சரியாகவே தேர்ந்தெடுத் திருக்கின்றது. ஈவிரக்கமற்ற சுரண்டலால் வெகு ஜனங்கள் ஓட்டாண்டிகளாக்கப்பட்டு, அதன் விளைவாக சந்தை சுருங்கி அது நெருக்கடியி

தொடர்ச்சி 7ம் பக்கம்

# இடதுசாரி ஒற்றுமை குறித்து

## எஸ்யுசிஐ (கம்யூனிஸ்ட்) கட்சியின் பொதுச் செயலாளர் தோழர் பிரவாஸ் கோஷ் அவர்கள் அக்டோபர் 1, 2015 அன்று செய்தியாளர் கூட்டத்தில் அளித்த பேட்டி

*திரிணமூல் காங்கிரஸ் அரசாங்கத்தின் மின் கட்டண உயர்விற்கு எதிராக 17கட்சி கூட்டணி என்று சொல்லப்படுகிற அதே சமயம் இடது முன்னணியின் போராட்டத்தில் பங்கெடுக்க மறுப்பதின் காரணமாக கூட்டுப் போராட்டத்தை ஒருங்கிணைக்கும் கடமையை மதிக்கவில்லை என சிபிஐ (எம்) தலைமையில் நடைபெற்ற இடது முன்னணியின் ஒரு கூட்டத்தில் எமது கட்சியின் மீது குற்றச்சாட்டப்பட்டதாக மேற்குவங்கத்தின் உள்ளூர் ஊடகத்தில் செய்தி வந்தது. திரிணமூல் காங்கிரஸுடன் நாங்கள் இதுவரையில் பேரம்பேசி வந்ததாகவும் விமர்சிக்கப்பட்டது. இந்த அடிப்படையற்ற, உள்நோக்கங்கொண்ட குற்றச் சாட்டுகளை மறுப்பதற்காகவும் உண்மையை காண்பிப்பதற்காகவும் எமது பொதுச் செயலாளர் தோழர் பிரவாஸ் கோஷ் அவர்கள் சென்ற அக் 1ம் தேதி செய்தியாளர் கூட்டத்தைக் கூட்டினார். அக்கூட்டத்தில் வங்க மொழியில் அவர் பேசியது ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கப்பட்டு நவம்பர் 1ம் தேதி நமது மத்திய ஆங்கிலப் பத்திரிகையான புரொலெடேரியன் ஏராவில் வந்தது. அது தமிழில் மொழிபெயர்க்கப்பட்டு இங்கு தரப்பட்டுள்ளது. மொழிபெயர்ப்பில் தவறுகளோ அல்லது நடையில் குறைகளோ இருப்பின் அதற்கு நாங்களே பொறுப்பாவோம்: ஆசிரியர்– பாட்டாளி சிந்தனை*

இடது முன்னணியின் ஒரு கூட்டத்தில் நடைபெற்ற சில விவாதங்கள் நேற்றைய (செப் 30, 2015) செய்தித்தாள்களில் வந்தது. அம்முன்னணியில் அங்கம் வகிக்கின்ற எந்த கட்சியும் அச்செய்தியை இதுவரை மறுக்கவோ அல்லது கேள்விகேட்கவோ இல்லை. எனவே வெளியிடப்பட்ட அனைத்தும் உண்மை என்றே நான் எடுத்துக் கொள்கிறேன். எங்களுக்கு மிகுந்த ஆச்சரியத்தையும் அதிர்ச்சியையும் அளிக்கக்கூடிய தென்னவென்றால், சிபிஐ (எம்)ன் மூத்த பொலிட்பீரோ உறுப்பினர் பிமன் போஸ் அவர்களின் முன்னிலையிலேயே அப்படிப்பட்ட விவாதம் நடைபெற்றதும் அதற்கு அவர் எவ்வித எதிர்ப்பும் தெரிவிக்காததுதான்.

ஆகஸ்ட், 2014ல் என்னுடன் பேசுவதற்கு முதலில் அவர் விரும்பம் தெரிவித்தார். நாங்கள் சந்தித்தோம், விவாதித்தோம். அதன்பிறகு அவர் என்னை தொடர்புகொண்டு அவர்களுடைய பொதுச் செயலாளர் என்னை சந்திப்பதற்காக கல்கத்தா வரவிருப்பதாக என்னிடம் தெரிவித்தார். சென்ற வருடம் அக்டோபர், அநேகமாக அக் 16 அன்று கல்கத்தாவில் சிபிஐ (எம்) அலுவலகத்தில் அவர்களுடைய முன்னாள் பொதுச் செயலாளர் பிரகாஷ் காரத் அவர்களுடன் நீண்ட விவாதம் நடைபெற்றது. எமது கட்சியின் மூத்த பொலிட்பீரோ உறுப்பினர் தோழர் ரஞ்சித் தார் என்னுடன் இருந்தார். சிபிஐ (எம்) சார்பில் பிமன் போஸும் அவ்விவாதத்தின்போது இருந்தார். அப்போது கூட்டு இயக்கங்கள் மேற்கொள்வது குறித்து பிரகாஷ் காரத் முன்மொழிந்தார். அவருடைய முழுமுன்மொழிவுகளை கேட்டபிறகு, முன்பும்கூட சிபிஐ (எம்) மற்றும்பிற இடதுசாரி கட்சிகளுடன் கூட்டு இயக்கத்தை நாங்கள் எப்போதுமே விரும்பினோம் என்று நான் அவரிடம் கூறினேன். சில விஷயங்களில், அது நடைபெறவில்லை என்பது மட்டுமின்றி பல்வேறு காரணங்களால் சில தருணங்களில் ஒற்றுமையில் முறிவும் ஏற்பட்டது. 1951–52ல் டாக்டர் சுரேஷ் பானர்ஜி (சுதந்திரத்திற்குப்பின் மேற்கு வங்கத்தின் முதல் அமைச்சரவையில் அமைச்சராக இருந்து, பின் ராஜினாமா செய்தவர்) தலைமையின்கீழ் பஞ்ச எதிர்ப்புக் கமிட்டி அமைக்கப்பட்டதையும் நான் அவரிடம் நினைவுகூர்ந்தேன். மேற்கு வங்கத்தில் அப்போது பெரிய கட்சிகளாக இருந்த ஆர்எஸ்பி, பார்வேர்டு பிளாக், ஆர்சிபிஐ ஆகிய கட்சிகளின் எதிர்ப்பின் காரணமாக சிபிஐ (ஒன்றாயிருந்த இந்திய கம்யூனிஸ்ட் கட்சி) அக்கமிட்டியில் சேர்த்துக் கொள்ளப்படவில்லை. அப்போது எமது கட்சி சிறியதாக இருந்தபோதிலும் எமது வேண்டுகோள் மற்றும் முன்மொழிவின் காரணமாக சிபிஐ சேர்த்துக்கொள்ளப்பட்டது.

நமக்கும் அவர்களுக்குமிடையிலான ஒற்றுமையில் முதன்முறையாக 1971ல் முறிவு ஏற்பட்டது என்பதை நான் பிரகாஷ் காரத்திடம் கூறினேன். இரண்டாவது ஐக்கிய முன்னணி அரசாங்கம் வீழ்ந்தபிறகு, சிபிஐயும் பார்வேர்டு பிளாக்கும் எம்முடன் ஒரு கூட்டணியை ஏற்படுத்திக் கொண்டது. மாறாக சிபிஐ (எம்)மும் பிறகட்சிகளும் தனியாக ஒரு கூட்டணியை ஏற்படுத்தின. மீண்டும் 1972ல் சிபிஐயும் பார்வேர்டு பிளாக்கும் காங்கிரஸுடன் கூட்டணி கொண்டன. நாம் சிபிஐ (எம்) முடன் கூட்டணி ஏற்படுத்தினோம். இந்த உறவு 1974ல் சிபிஐ (எம்)ஆல் முறித்துக்கொள்ளப்பட்டது. ஏனெனில், அச்சமயம் இந்திரா காங்கிரஸ் தலைமையிலான மத்திய அரசாங்கத்திற்கெதிராக சில ஜனநாயக கோரிக்கைகளை முன்வைத்து மாணவர்கள் இளைஞர்களின் ஒரு சக்திவாய்ந்த போராட்டம் எழுந்துவந்தது, நாட்டின் வடக்கு, மத்திய, கிழக்குப் பகுதிகளை அப்போராட்டம் மூழ்கடித்தது. ஒரு கட்டத்தில், மூத்த காந்தியவாதியான ஜெபி என்ற நியப்பட்ட ஜெயபிரகாஷ் நாராயணின் தலைமை ஏற்பட்டது. அந்த ஜெபி இயக்கத்தில் பங்கேற்குமாறு நாங்கள் சிபிஐ (எம்)ஐ வேண்டினோம். அப்போது சிபிஐ இந்திரா காந்தியை வெளிப்படையாக ஆதரித்தது. அவ்வியக்கத்தில் வலதுசாரிகள் இருக்கிறார்கள் என்ற வாதத்தை எழுப்பி அவ்வியக்கத்தில் சிபிஐ (எம்) இணையாதது குறித்து எங்கள் ஆய்வில் சிபிஐ (எம்) இந்திரா காந்தியுடன் ரகசியமாக உறவை வைத்துள்ளது என காட்டினோம். இடதுசாரிகள் அவ்வியக்கத்தில் இல்லாததால் வலதுசாரி சக்திகள் அதை சாதகமாக எடுத்துக்கொள்கிறார்கள் என நாம் கூறினோம். 1974ல் ஜெபி இயக்கத்தின் தலைமையில் இடதுசாரிகள் இருந்திருந்தால் பாஜக இன்றுள்ள அதன் நிலையை அடைந்திருக்கமுடியாது என இன்றும்கூட நாங்கள் நம்புகிறோம். இந்த வேறுபாட்டை அடிப்படையாகக்கொண்டு, சிபிஐ (எம்) நம்முடனான உறவை முறித்துக்கொண்டது.

1977 தேர்தலில் இதே சிபிஐ (எம்) ஆர்எஸ்எஸ்ஸும் ஜனசங்கமும் இருந்த ஜனதா கட்சியுடன் உறவை ஏற்படுத்திக்கொண்டது. அதுமாதியான கட்சியாக நாங்கள் இருக்கவில்லை. 1974 முதற்கொண்டு மத்திய அரசாங்கம் அதேபோல மேற்கு வங்கத்திலும் கேரளத்திலுமுள்ள அரசாங்கங்களுக்கெதிராக இடைவெளியின்றி இடதுசாரி இயக்கத்தை தனியாகவே நாங்கள் வளர்த்தெடுத்தோம். மேற்கு வங்கத்தில் ஆரம்ப மட்டத்திலிருந்து ஆங்கிலத்தை அகற்றுவது உட்பட இடது முன்னணி அரசாங்கத்தின் அனைத்து மக்கள் விரோத கொள்கைகளையும் எதிர்த்து நாங்கள் போராடினோம் என்பதையும் பிரகாஷ் காரத்திடம் நான் கூறினேன். 4ம் வகுப்புவரை பாஸ்–பெயில் முறையை நீக்கிய போது நாங்கள் போராட்ட இயக்கத்தை நடத்தினோம். தற்போது மத்திய அரசாங்கம் ஒருபடி முன்சென்று 8ம் வகுப்புவரை பாஸ்–பெயில் முறையை நீக்கிவிட்டது. இதையும் எதிர்த்து நாங்கள் போராடிக் கொண்டிருக்கிறோம். இவ்வாறான போராட்டங்களின் போக்கிலும் மற்றபிற வழிகளிலும் எமது கட்சியின் தலைவர்கள் தொண்டர்கள் 161 பேர் இடது முன்னணி ஆட்சியின்போது கொல்லப்பட்டிருக்கிறார்கள். இவையெல்லாவற்றையும் நான் பிரகாஷ் காரத்திடம் கூறினேன். மேற்கு வங்கத்தில் இடது முன்னணி அரசாங்கத்தின் மக்கள் விரோத கொள்கைகளுக்கெதிராக நாங்கள் போராடிக் கொண்டிருக்கும்போது மத்திய அராங்கத்திற்கெதிராகவும் பிற மாநில அரசாங்கங்களுக்கெதிராகவும் போராட்டங்களை வளர்த்தெடுப்பதில் சிபிஐ (எம்)வுடன் ஒற்றுமையை நாங்கள் விரும்பினோம் என்பதையும் நான் அவரிடம் சொன்னேன். ஆனால் சிபிஐ (எம்)ன் அப்போதைய தலைமை இதை ஒத்துக்கொள்ளவில்லை. மேற்கு வங்க அரசாங்கத்திற்கெதிரான போராட்டத்தை நாங்கள் நிறுத்தவேண்டும் அப்போது மட்டுமே அகில இந்திய அளவிலும் பல்வேறு மாநிலங்களிலும் எங்களுடன் ஒற்றுமையை ஏற்படுத்த முடியும் என்பது அவர்களுடைய நிபந்தனை. அந்நிபந்தனையை நாங்கள் ஏற்கவில்லை. எனவே, நாங்கள் ஒற்றுமையை விரும்பினாலும் அந்த சமயத்தில் அது கைகூடவில்லை. மேற்கு வங்கத்தில் இடது முன்னணி அரசாங்கத்திற்கெதிராக நாங்கள் போராட்டங்களை நடத்திக் கொண்டிருந்தபோது, எங்கள் தொண்டர்களும் தலைவர்களும் கொல்லப்பட்டுக் கொண்டிருந்தபோது, ராஜ்ய சபா தேர்தலில் நாங்கள் எப்போதும் இடதுசாரி வேட்பாளர்களுக்கே வாக்களித்து வந்தோம்.

மேலும், இன்றும்கூட நாங்கள் ஒற்றுமைக்கு சாதகமாகவே இருக்கிறோம் என்பதையும் கூறினோம். எஸ்யுசிஐ (கம்யூனிஸ்ட்), ஆர்எம்பி, எம்சிபிஐ ஆகியவை அடங்கிய ஒரு இடது முன்னணி ஏற்கெனவே இருப்பதால் கேரளத்தில் மட்டும் இந்த ஒற்றுமை சாத்தியமில்லை. மேற்கு வங்கத்தைப் பொறுத்தவரை மக்கள் கோரிக்கைகளுக்காக உங்கள் அரசாங்கத்தை எதிர்த்து மிகநீண்ட காலமாக போராடினோம் என்று திட்டவட்டமாக சொல்லி விட்டோம். எங்கள் தோழர்கள் ஏராளமானோர் படுகொலை செய்யப்பட்டனர். எமது கட்சியைச் சேர்ந்த 49 தலைவர்களும் ஊழியர்களும் பொய் வழக்கு தொடுக்கப்பட்டு ஆயுள் சிறைதண்டனை அனுபவித்து வருகின்றனர். எங்கள் தோழர்கள் கடும் ஒடுக்குமுறையையும் சித்திரவதையையும் எதிர்கொண்டனர். எனவே இருதரப்பிற்கு மிடையில் பல்வேறு மட்டங்களில் கசப்புணர்வு நிலவுகிறது. இப்படிப்பட்ட நிலையில் ஒரே இரவில் முழு ஒற்றுமை என்பது ஏற்படமுடியாது. ஏகாதிபத்திய எதிர்ப்பு, வகுப்புவாத எதிர்ப்பு என்ற இரண்டு பிரச்சினைகளில் கூட்டு இயக்கத்தை வளர்த்தெடுப்பதன்மூலம் ஒரு துவக்கத்தை மட்டுமே ஏற்படுத்தமுடியும். நன்கு உறவு மேம்படும்போது ஒற்றுமை படிப்படியாக விரிவுபடுத்தப்படும்.

கல்வி, சுகாதாரம், மின்சாரம், போக்குவரத்துக் கட்டணம், பயங்கரவாதம் போன்ற விஷயங்களில் திரிணமூல் காங்கிரஸ் அரசாங்கத்திற்கெதிராக உங்களுடன் கூட்டு போராட்டத்தை எங்களால் மேற்கொள்ளமுடியாது. ஏனெனில், இதே விஷயங்களுக்காக உங்கள் அரசாங்கத்திற்கெதிராக நாங்கள் போராடினோம். வேரேதேனும் புதிய பிரச்சினைகள் தோன்றினால், அது குறித்து கண்டிப்பாக பரிசீலனை செய்வோம். திரிணமூல் காங்கிரஸுடன் எப்படிப்பட்ட சூழ்நிலையில் நாங்கள் ஒற்றுமையை ஏற்படுத்தினோம் அவ்வொற்றுமையை ஏன் நாம் முறித்தோம் என்பதையெல்லாம் மிக வெளிப்படையாக நான் சொல்லியிருக்கிறேன். தொடர்ந்து நடைபெற்ற செய்தியாளர் கூட்டத்தில் அவ்விஷயங்களையெல்லாம் மிக நன்றாக தெளிவுபடுத்தி விட்டோம். அது ஊடகங்களில் வந்துள்ளது. நாங்களும் அதுகுறித்து புத்தகம் வெளியிட்டிருக்கிறோம்.

நவம்பர் 1, 2014ல் டெல்லியில் 6 இடதுசாரி கட்சிகளுடைய கூட்டம் நடைபெற்றது. சிபிஐ (எம்), சிபிஐ, ஆர்எஸ்பி, பார்வேர்டு பிளாக், எஸ்யுசிஐ (கம்யூனிஸ்ட்), சிபிஐ (எம் எல்–லிபரேஷன்) ஆகியவற்றின் பிரதிநிதிகள் முன்னிலையில் ஒரு கூட்டு இயக்கம் முடிவுசெய்யப்பட்டது. தற்போதைய ஒற்றுமை முயற்சியின் ஒரு துவக்கமாக அது இருந்தது. மேற்கு வங்கத்தில் இந்த 6 கட்சிகளினுடைய சில கூட்டு நிகழ்ச்சிகள் நடைபெற்றன.

சிபிஐ (எம்)ன் சமீபத்திய மாநாட்டிற்கு நான் அழைக்கப்பட்டேன் என்பதை இங்கு குறிப்பிட விரும்புகிறேன். அம்மாநாட்டின் பிரதிநிதிகள் கூட்டத்தில் காங்கிரஸ் கட்சியானது மதசார்பற்ற, ஜனநாயகக் கட்சியாக ஒருபோதும் கருதப்பட முடியாது என சிபிஐ (எம்) கட்சியின் தலைவர்கள் முன்னிலையில் நான் கூறினேன். மதசார்பின்மை என்றால் அரசியலுடன் மதத்தை கலப்பது அல்ல. மதம்சார்ந்த அரசியலையே காங்கிரஸ் பின்பற்றி வந்துள்ளது. நமது நாட்டில் சுபாஷ் சந்திரபோஸ், சரத் சந்திரர், நஸ்ருல், பகத்சிங் மற்றும்பலர் மதசார்பற்ற அரசியலின் மிகச்சிறந்த உதாரணங்களாக இருந்தனர். ஆனால் இந்திய தேசிய காங்கிரஸானது விடுதலை இயக்கத்தின்போதுகூட மதசார்பின்மையை உயர்த்திபிடிக்கவில்லை. அதன் தவிர்க்க முடியாத விளைவாக நாடு பிரிவினைக் குள்ளாக்கப்பட்டது. பின்பு, மதம்சார்ந்த அரசியலை காங்கிரஸ் விரிவாக ஊக்குவித்துவந்தது. வகுப்புவாத கலவரங்களிலும்கூட காங்கிரஸ் ஈடுபட்டது. ரூர்கேலா மற்றும் பாகல்பூர் பயங்கர கலவரங்கள் காங்கிரஸால் அரங்கேற்றப்பட்டவை. பாபர் மஜீத் கதவுகளின் பூட்டை முதலில் திறந்தது காங்கிரஸ். அதை சாதகமாக்கிக்கொண்டு மசூதி முழுவதையும் இடித்து நொறுக்கியது பாஜக, பல இடங்களில் கலவரங்களை பாஜக நடத்தியிருக்கிறது. எனவே, காங்கிரஸை நாங்கள் மதசார்பற்ற அல்லது ஜனநாயக கட்சியாக கருதவில்லை. சமாஜ்வாதி, ராஷ்ட்ரீய ஜனதாதள், ஜனதாதள் (யு) ஆகிய இக்கட்சிகள் ஜாதியக் கட்சிகள். இந்தக் கட்சிகளையும் நாங்கள் மதசார்பற்ற – ஜனநாயக கட்சிகளாக கருதவில்லை. அவர்களுடைய கட்சிக் மாநாட்டிலேயே இவற்றையெல்லாம் நான் குறிப்பிட்டிருக்கிறேன், மதசார்பின்மை –ஜனநாயகம்

தொடர்ச்சி 4ம் பக்கம்

## இடதுசாரி ஒற்றுமை குறித்து

# ஜெயப்பிரகாஷ் நாராயண் இயக்கத்தில் வலதுசாரி சக்திகள் இருப்பதாகக்கூறி சிபிஐ (எம்) சேரவில்லை

3ம் பக்கத் தொடர்ச்சி

மற்றும் இடதுசாரிவாதம் ஆகிவற்றின் வரையறை அளித்திருக்கிறேன், மதசார்பற்ற – ஜனநாயக சக்திகளாக எவற்றையெல்லாம் கருதமுடியும் என்பதையும் நான் காட்டியிருக்கிறேன். நீங்கள் விரும்பினால் உங்களுக்கு அவ்வுரைகளின் நகலை எங்களால் தரமுடியும். 1950களில் நாட்டில் காங்கிரஸ் கட்சிக்கு ஒரே மாற்றாக இடதுசாரிகளே இருந்தனர் என நான் சொன்னேன்.

1950 மற்றும் 60களில் இந்தியாவில் இடதுசாரி இயக்கத்தின் நரம்பு மையமாக மேற்கு வங்கம் இருந்தது. அதற்கு காரணம் என்ன? உலக சோசலிச அமைப்பு, உலக கம்யூனிச இயக்கத்தின் தாக்கம் ஒருபுறம். மறுபுறம் இடதுசாரிகள் போராட்டத்தை, போர்குண மிக்க போராட்டத்தை அப்போது நடத்தினர். அப்போது இடதுசாரிவாதம் நன்மதிப்பைப் பெற்றிருந்தது. ஆனால் இன்று அது படுகுழிக்குள் வீழ்ந்துவிட்டது. இடதுசாரிவாதத்தின் பெருமை மீட்டெடுக்கப்படவேண்டும், அதற்கு போர்குண மிக்க வர்க்க, வெகுஜன இயக்கங்கள் தேவை என சிபிஐ (எம்) கட்சி மாநாட்டில் நான் கூறினேன். நாங்கள் அதைத்தான் மிகவும் வலியுறுத்தி வருகிறோம். போர்குணமிக்க வர்க்க, வெகுஜன போராட்டங்கள் அகில இந்திய அளவில் இடதுசாரிகள் தலைமையில் வளர்த்தெடுக்கப்பட வேண்டும். என்னுடைய கருத்து இதுவாகத்தான் இருந்தது. ஏதோ ஒரு தேர்தல் கதம்பக் கூட்டணியை நாங்கள் விரும்பவில்லை என அவர்கள் மாநாட்டில் நான் சொன்னேன். எண்களின் அடிப்படையிலான தேர்தல் கூட்டணி அல்ல, மாறாக போராட்டத்தின் நலனுக்கான கூட்டணிக்குள் நாம் நுழைந்திருக்கிறோம். இந்த ஒற்றுமையானது ஒற்றுமை– போராட்டம் – ஒற்றுமை என்ற மார்க்சிய கோட்பாட்டின் அடிப்படையில் இருக்கவேண்டும் என்பதையும் நான் கூறினேன். ஏற்றுக்கொள்ளப்பட்ட குறைந்தபட்ச திட்டத்தினடிப்படையிலான ஒற்றுமை நிலவும் அதேவேளையில், ஒன்றுபட்ட இயக்கத்திற்குள் சித்தாந்தப் போராட்டத்தை நடத்தும் வழியில் புரிதலை மேம்படுத்துவதன்மூலம் அவ்வொற்றுமையை மேலும் உறுதிப்படுத்துவது என்பதே இதனர்த்தமாகும். இதுதான் சிபிஐ (எம்) கட்சிக் மாநாட்டின் பிரதிநிதிகளின்முன்பு நான் கூறியதாகும். எங்களுடைய நிலைப்பாடு மிகவும் தெளிவானது. இன்றும்கூட அதே வழியைத்தான் நாங்கள் தொடர்ந்து கொண்டிருக்கிறோம்.

இந்தப் பின்னணியில், 17 கட்சி கூட்டணியால் அறிவிக்கப்பட்டுள்ள நிகழ்ச்சிகளில் பங்கேற்காதது குறித்த எங்கள்மீது குற்றச்சாட்டபட்டுள்ளது என நான் சொல்ல விரும்புகிறேன். முதலில், 17 கட்சி கூட்டணி என்ற ஒன்றே இல்லை. 6 கட்சி கூட்டணி என்ற ஒன்றுதான் அமைக்கப்பட்டது. அக்கூட்டத்திற்கு இன்னும்சில கட்சிகளின் பிரதிநிதிகளை அழைக்கலாம் என சிபிஐ (எம்) முன்மொழிந்தது. ஆரம்பத்தில் எங்கள் பிரதிநிதிகளும் நல்லெண்ணத்தில் அதற்கு எதிர்ப்பு தெரிவிக்கவில்லை. அந்த 17 கட்சிகளின் பெயர்களைச் சொல்லக்கூடிய எவரேனும் இந்த அவையில் இருக்கின்றீரா? ஒன்றிரண்டிற்குமேல் என்னால் சொல்லமுடியாது. அதுபோன்ற கட்சிகளின் பிரதிநிதிகள் அக்கூட்டு கூட்டத்திற்குவர ஆரம்பித்திருக்கின்றனர். அவர்களெல்லாம் சிபிஐ (எம்)ன் ஆமாம்சாமிகள். 17 கட்சிகளின் அதுபோன்ற கூட்டங்களுக்கு வந்து அவர்களின் முடிவுகளை ஏற்றக்கொள்ளும் கட்சியாக எங்களால் இருக்கமுடியாது என்று நாங்கள் சொன்னோம். எமது கட்சியின் மேற்குவங்க மாநில செயலாளர் தோழர் சௌமன் போஸ் அவர்கள் செப் 17 அன்று இரவு 10.30 மணிக்கு பிமன் போஸை சந்தித்து அந்த 17 கட்சி கூட்டணியுடன் எங்களுக்கு எந்த சம்பந்தமுமில்லை என தெரிவித்துவிட்டார். பிறகு ஏன் அவர்கள் அந்த 17 கட்சி கூட்டணி பற்றிப் பேசிக்கொண்டிருக்கிறார்கள்? டெல்லி கூட்டத்தின் முடிவின்படி 6 கட்சி கூட்டணி ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. மேற்கு வங்கத்தில் இரண்டு பிரச்சினைகளுக்காக நாங்கள் ஒன்று சேர்வோம், புதிய பிரச்சினைகள் ஏதேனும் வந்தால் அப்பிரச்சினைகளுக்கான நிகழ்ச்சிகளில் பங்கேற்பது குறித்து நாங்கள் ஆய்வுசெய்வோம். நாங்கள் கூறியதை மிகவும் உன்னிப்பாக கவனித்ததாகவும் அதை பிமன் போஸ் ஏற்றுக்கொண்டதாவும் எனக்கு தெரிவிக்கப்பட்டது. 17 கட்சி கூட்டணி குறித்து இனி எதுவும் பேசமாட்டோம் எனவும் அவர் உறுதியளித்தார். எனவே, எங்கள் தரப்பிலிருந்து முடிவு மீறல் என்பது எதுவும் இல்லை. என்னுடைய முதல் விஷயம் இது.

திடீரென, 123 அமைப்புக்களின் சார்பாக கல்கத்தாவின் ராணி ராஸ்மோனி சாலையில் ஒரு மாநாடு நடைபெறவிருப்பதாக எமது கட்சியின் வெகுஜன ஸ்தாபனங்களுக்கு தெரிவிக்கப்பட்டது. இடம் பதிவுசெய்யப்பட்டுவிட்டது, தேவையான அனைத்து அனுமதிகளும் பெற்றாகிவிட்டது. நீங்கள் வந்து பங்குகொள்ளலாம் என ஒரு கடிதம் வந்தது. யார் இந்த முடிவை எடுத்தது? இந்த முடிவு எப்போது எடுக்கப்பட்டது, என்ன நோக்கத்திற்காக எடுக்கப்பட்டது? அதுபற்றி எங்களுக்கு எதுவும் தெரியாது. யாராவது ஏதாவது முடிவெடுப்பார்கள், அம்முடிவை பின்தொடர்ந்து செல்லக்கூடிய, எவருடைய அடிவருடிகளும் நாங்களில்லை. இந்த நிகழ்ச்சியை யார் முடிவு செய்தார்கள்? என்ன நோக்கத்திற்காக என்ன கோரிக்கைக்காக என்ற முன்கூட்டிய விவாதங்கள் எதுவும் இல்லை. திடீரென அவர்களாகவே நிகழ்ச்சியை முடிவுசெய்தார்கள், அதில் பங்கேற்கும்படி எங்களிடம் கூறினார்கள். எனவே அந்நிகழ்ச்சியில் எங்களுடைய வெகுஜன ஸ்தாபனங்கள் எவையும் பங்கேற்கவில்லை.

அகில வங்க மின்சார நுகர்வோர் சங்கம் (ABECA) 1992ல் அமைக்கப்பட்டது. மின்சாரத்திற்கான இயக்கத்தில் அப்போது இடது முன்னணி எங்கு இருந்தது? மின் கட்டணத்தை தொடர்ந்து உயர்த்தியது அப்போதைய இடது முன்னணி அரசாங்கமாகும். அவர்கள் மின்சார மானியத்தைகூட வெட்டினார்கள். இது குறித்து ஆவணம் ஒன்றை நாங்கள் வெளியிட்டிருக்கிறோம். மின் கட்டணத்தை உயர்த்த திரிணமூல் காங்கிரஸ் பயன்படுத்திவரும் மாதாந்திர கட்டண வேறுபாட்டை சமப்படுத்தும் சட்டப் பிரிவை (Clause of Monthly Variable Cost Adjustment) உருவாக்கியது இடது முன்னணி அரசாங்கமே. இடது முன்னணி துவக்கியதை திரிணமூல் காங்கிரஸ் பின்பற்றிவருகிறது. ABECAவால் நடத்தப்பட்ட போராட்டங்கள் மற்றும் இதுவரை வென்றெடுக்கப்பட்ட கோரிக்கைகளின் பட்டியல் இங்கு வந்துள்ள பத்திரிகை நண்பர்கள் அனைவருக்கும் வழங்கப்பட்டுள்ளது. திரிணமூல் காங்கிரஸ் அரசாங்கம் நிறுவப்பட்டபின் ABECAவால் இதுவரை நடத்தப்பட்ட போராட்டங்கள் எத்துணை, வென்றெடுக்கப்பட்ட கோரிக்கைகள் எத்துணை, வென்றெடுக்கப்படவுள்ள கோரிக்கைகள் எத்துணை, அப்போராட்டங்கள் எத்துணை முறை தாக்கப்பட்டன, அதன் அமைப்பாளர்களும் பங்கேற்றோரும் எத்துணை முறை சிறையிடப்பட்டனர் என்ற அனைத்து விபரங்களும் அப்பட்டியலில் அடங்கியுள்ளன. திடீரென, மின்கட்டண உயர்வுக்கெதிரான இரண்டு நாள் போராட்ட நிகழ்ச்சியை இடது முன்னணி எடுத்துள்ளது. நாங்கள் எவ்வாறு அதில் பங்கேற்கமுடியும்? மின்கட்டணத்தை திரும்பத்திரும்ப உயர்த்தியது அவர்கள். கல்கத்தா மின் விநியோக கழகத்தை (CESC) கோயங்காவிற்கு தரைமட்ட விலையான ரூ 8 கோடிக்கு விற்றது அவர்கள். அவர்களின் அதுபோன்ற மின் கட்டண உயர்வுக்கு எதிரான நிகழ்ச்சியில் எவ்வாறு நாங்கள் சேர முடியும்? ABECAயானது எங்கள் கட்சியின் அமைப்பு அல்ல என்பதை இங்கு சுட்டிக்காட்டப்பட வேண்டியது அவசியமாகும். அதில் அரசியல் சாராத நபர்கள் பலர் இருக்கிறார்கள். எங்கள் கட்சியின் ஊழியர்களும் அவ்வமைப்பிற்குள் இருக்கின்றனர்.

அதுபோல் கல்விப் பாதுகாப்புக் கமிட்டி என்பது மற்றொரு உதாரணமாகும். மறைந்த நீதிபதி விஆர் கிருஷ்ணய்யர் அகில இந்திய கல்விப் பாதுகாப்புக் கமிட்டியின் தலைவராக இருந்தார். அதைப் போலவே புகழ்பெற்ற அறிவுஜீவிகளான மறைந்த டாக்டர் சுகுமார் சென், டாக்டர் நிஹார் ரஞ்சன் ராய், டாக்டர் பிரதுல் குப்தா, பிரேமேந்திர மித்ரா, டாக்டர் சுசில் குமார் முகர்ஜி, சந்தோஷ் குமார் கோஷ் மற்றும் பலர் அக்கமிட்டியின் மேற்குவங்க அமைப்பின் உறுப்பினர்களாவர். கல்விப் பாதுகாப்புக் கமிட்டியின் அகில இந்திய அளவிலும் மேற்கு வங்க கமிட்டியிலும் எமது கட்சியின் ஊழியர்களும் பணியாற்றினர். 1970களின் துவக்கத்தில் காங்கிரஸ் முன்னாள் முதல்வரான சித்தார்த்த சங்கர் ரேயால் முதலில் இம்மாநிலத்தில் பயங்கரவாதம் கட்டவிழ்த்துவிடப்பட்டது. இடது முன்னணி ஆட்சியின்போதும்கூட விரிவான பயங்கரவாதம் இருந்தது. திரிணமூல் ஆட்சியிலும்கூட அதுவே தொடர்ந்து கொண்டிருக்கிறது. இந்தப் பின்னணியில், பயங்கரவாதம் குறித்த விஷயத்தில் இன்று நாம் இடது முன்னணியுடன் இன்று ஒன்றுசேர முடியுமா? பயங்கரவாதம் முந்தைய அரசாங்கத்தால் அரங்கேற்றப்பட்டது. எனவே தற்போதைய அரசாங்கம் அந்த பயங்கரவாதத்தை தொடர்ந்து கொண்டிருக்கிறது என்று நாம் சொல்லவேண்டியதிருக்கிறது. இதை நாம் சொல்லவில்லையெனில் மக்களை ஏமாற்றுவதாகிவிடும். நம்மால் அதைச் செய்ய முடியாது. எங்களுடைய அரசியல் இவ்வாறானதல்ல.

1974லிலிருந்து அகில இந்திய அளவிலும் மேற்கு வங்க அளவிலும் தனியாக நாங்கள் போராடிக் கொண்டிருக்கிறோம். யாருடைய தயவினாலுமல்ல. எனவே, அவர்களுடன் ஒத்துப்போகும் பிரச்சினைகளில் அவர்களுடனான கூட்டுப்போராட்டத்தில் நாங்கள் பங்கேற்கிறோம். எவ்விஷயத்தில் ஒத்துப் போகவில்லையோ அவ்விஷயத்தில் கூட்டுப் போராட்டத்தில் ஈடுபடமாட்டோம். பிரகாஷ் காரத்திடம் நாம் சொன்ன இவ்வெல்லா விஷயமும் பிமன் போஸிற்குத் தெரியும். எங்கள் மாநிலச் செயலாளர் இவற்றையெல்லாம் மீண்டுமொரு முறை அவரிடம் ஞாபகப்படுத்தியுள்ளார். அதன் பிறகும்கூட, 17 கட்சி நிகழ்ச்சிகளில் சேர எங்களை வலியுறுத்தியபோது, ஊடகங்களுக்கு எமது மாநில செயலாளர் அனைத்தையும் அறிக்கையில் தெளிவுபடுத்தியுள்ளார். மேற்கு வங்க சிபிஐ (எம்) கட்சியின் பத்திரிகையான ஜனசக்திகூட அவ்வறிக்கையை வெளியிட்டிருக்கிறது. எங்களுடைய நிலைப்பாடு தெளிவாக தெரிந்தபிறகும் இடது முன்னணி கூட்டத்தில் இவ்விஷயங்குறித்து பிமன் போஸ் அவர்கள் வாயே திறக்காதிருந்ததைக் கண்டு நான் மிகவும் திகைப்படைகிறேன்.

தேர்தல் ஆதாயங்களுக்காக திரிணமூல் காங்கிரஸுடன் பேரம் பேசுவதற்காகவே நாங்கள் இடதுசாரி கூட்டணியில் இணைந்ததாக ஆர்எஸ்பி மற்றும் பார்ஃவர்டு பிளாக்கின் தலைவர்கள் எங்கள்மீது குற்றச்சாட்டு கூறியுள்ளனர். இது மிகமிக அநாகரீகமான தூற்றாகும். ஒருசில சீட்டுக்காக யார் பேரம் பேசிக்கொண்டும் கெஞ்சிக்கொண்டும் திரிகிறார்களோ அவர்கள் மட்டுமே திரிணமூலுடன் பேரம் பேசுவதற்காக சிபிஐ (எம்)வுடன் நாங்கள் பிரச்சினை அடிப்படையிலான கூட்டணியில் சேர்ந்துள்ளதாக எங்களை கூறுமளவிற்கு தரம்தாழ்ந்து போகமுடியும். இவ்வாறெல்லாம் எங்கள் கட்சி கடந்த காலத்திலும் செய்ததில்லை, இனி வருங்காலத்தில் செய்யப் போவதுமில்லை.

புரட்சிகர நோக்கத்திலிருந்து வெகுஜன இயக்கங்களின் நலனை மனதில்வைத்து, குறிப்பிட்ட சூழ்நிலையில் குறிப்பிட்ட நிலைப்பாட்டை எமது கட்சி எடுக்கிறது. எங்களுடைய அரசியல் கருத்துக்களை நாங்கள் எப்போதும் மிகவும் வெளிப்படையாக மக்கள்முன் வைக்கிறோம். எனவேதான் மக்கள் எங்கள்மீது மிகவும் நம்பிக்கை வைக்கிறார்கள். போராட்டங்களை கட்டும்போது மட்டுமல்ல, மிரட்டல்களையும் தாக்குதல்களையும் எப்பொழுதெல்லாம் சந்திக்கிறோமோ அப்பொழுதெல்லாம் உறுதியுடன் அவர்கள் எங்களுடன் துணைநிற்கிறார்கள். சிங்கூர், நந்திகிராம் இயக்கங்களில் திரிணமூலுடன் நாங்கள் இணைந்தபோது அதுகுறித்து மக்களை நாங்கள் நன்கு தெளிவுபடுத்தினோம். சிங்கூர், நந்திகிராம் ஆகிய இரண்டு இடங்களிலுமே இயக்கங்களை முதலில் கட்டியது எமது கட்சியே. தன்னந்தனியாக போராடி, அப்போதைய இடது முன்னணி அரசாங்கத்தின் தாக்குதல்களை எதிர்கொண்டு, போராட்டத்தை வெற்றிபெறச் செய்வதென்பது எங்களுக்கு சாத்தியமில்லாததாக இருந்தது. அவ்வியக்கங்களில் சேர திரிணமூல் விரும்பியது. ஆரம்ப கட்டத்தில் கட்சி மட்டத்திலல்லாமல் வெகுஜன போராட்ட கமிட்டிகள் அமைப்பதன் மூலம் இயக்கங்களை வளர்த்தெடுத்தோம். அதே சமயம் திரிணமூலுடன் நாங்கள் முரண்படவும் நேர்ந்தது. சிங்கூரில் வலுக்கட்டாய நிலப்பறிப்பை இரண்டு நாட்கள் நாங்கள் எதிர்த்தோம். அந்த எதிர்ப்பு இயக்கத்தில் விவசாயிகளை எங்களால்

தொடர்ச்சி 5ம் பக்கம்

## இடதுசாரி ஒற்றுமை குறித்து

# தேர்தலுக்காக எப்படியாவதொரு கூட்டணிக்காக நாம் இல்லை

4ம் பக்கத் தொடர்ச்சி

ஈடுபடுத்த முடிந்தது. கல்கத்தாவில் உண்ணாவிரதமிருந்ததன்மூலம் திரிணமூல் கட்சிதலைவர் இவ்வியக்கத்தில் இடையூறு ஏற்படுத்தினார். சிங்கூரில் இடது முன்னணி நிலத்தை பறித்தது, ஆனால் அதை நந்திகிராமில் செய்யமுடியவில்லை. சுபேந்து அதிகாரி தலைமையிலான திரிணமூல் வட்டாரகட்சி நாம் காட்டிய வழியை ஆதரித்தது. அதற்காக திரிணமூல் தலைமை அவரிடம் பகைமை கொண்டது. நந்திகிராமில் எதிர்ப்பு இயக்கம் கட்டமுடிந்தது. இயக்கத்தை ஒடுக்க படுகொலைகளிலும் கும்பல் பலாத்காரத்திலும் ஆளும் சிபிஐ (எம்) கட்சியும் அதன் அரசாங்கமும் ஈடுபட்டது. அச்சமயத்தில் சிபிஐ (எம்)ஐ அதிகாரத்திலிருந்து தூக்கியெறியுமாறு முதன் முதலாக அழைப்பு விடுத்தோம்.

முன்பு, 1977லிலிருந்து சிபிஐ (எம்)ஐ எதிர்த்து போராடிவருகிறோம், ஆனால், சிபிஐ (எம்)ஐ அதிகாரத்திலிருந்து தூக்கியெறியுமாறு ஒருபோதும் நாங்கள் அழைப்பு விடுக்கவில்லை. அவர்களுக்கெதிராக நாங்கள் தன்னந்தனியாக போராடி வந்தோம். முன்னதாக எங்களிடம் தேர்தலில் கூட்டு சேரும் திட்டத்தை திரிணமூல் முன்வைத்தது. நாங்கள் மறுத்தோம். 2001ல் சிபிஐ (எம்)ன் பிமன் போஸுடம் காலஞ்சென்ற அனில் பிஸ்வாஸுடம் அவர்களுடைய அலிமுதீன் தெருவிலுள்ள மாநில தலைமையகத்தில் கூட்டணி வைத்துக்கொள்ள எங்களுக்கு அழைப்பு விடுத்தனர். நாங்கள் அதற்கு இணங்கியிருந்தால், எங்களுக்கு மேலும்பல சீட்டுகள் கிடைத்திருக்கும், மந்திரி பதவிகள்கூட கிடைத்திருக்கும். ஆனால் அந்த ஆதாயங்களை நாங்கள் மறுதலித்தோம். முதலில் இடதுசாரிவாதத்திற்கு திரும்ப வாருங்கள் அதன்பிறகு இதுகுறித்து யோசிக்கிறோம் என்று நாங்கள் அவர்களிடம் கூறினோம்.

நந்திகிராமில் வெறும் குண்டாந்தடிகளும் குண்டுகளும் மட்டும் தாக்கவில்லை. படுகொலைகளும் கும்பல் பலாத்காரமும் அங்கு நடைபெற்றன. ஜனநாயக இயக்கங்களை நசுக்க முன்பும் தாக்குதல்கள் நடைபெற்றிருக்கின்றன. ஆனால், பெருமளவிலான கும்பல் பலாத்காரங்கள் ஒருபோதும் நடைபெற்றதில்லை. இந்த காரணத்திற்காக சிங்கூர், நந்திகிராம் இயக்கத்தை அடிப்படையாகவைத்து சிபிஐ (எம்)மிற்கு எதிராக பொதுக் கருத்து வளர்ந்துவந்தது. இந்தப் பின்னணியில்தான் சிபிஐ (எம்) ஆட்சியை அகற்ற வேண்டும் என்ற கோஷத்தை நாங்கள் எழுப்பினோம். சிபிஐ (எம்)ஐ அதிகாரத்திலிருந்து அகற்ற முதன் முறையாக நாங்கள் அழைப்பு விடுத்தோம். ஏனெனில், அதிகாரத்தில் அவர்கள் தொடர்ந்தால் போராட்டங்களை அவர்கள் ஒடுக்கும் தீவிரம் மேலும் அதிகரிக்கும். இவற்றையெல்லாம் அப்போது வெளிப்படையாக நாங்கள் சொன்னோம். திரிணமூல் அதிகாரத்திற்காக போராடியது, நாங்கள் வெகுஜன இயக்கங்களின் நலனுக்காக போராடினோம். திரிணமூல் கட்சியுடன் எங்களுக்கு கூட்டணி ஏற்படப்போகும் தருணத்தில், எங்களுடன் சேருங்கள் என்ற அழைப்பைத்தாங்கி எமது கட்சியின் மற்றசில தலைவர்களுடன் ஆர்எஸ்பி, பார்ஃவர்டு பிளாக் கட்சி அலுவலகங்களுக்கு நானே சென்றேன். எங்கள் கருத்துக்களுடன் உடன்பட்டபோதிலும், எங்கள் முன்மொழிவை ஏற்றுக்கொள்வதில் அவர்கள் தங்களுடைய இயலாமையை வெளிப்படுத்தினர். அப்போது அவர்கள் எங்களிடம் என்ன சொன்னார்கள் என்பதை வெளிப்படுத்தி அசோக் கோஷையும் (பார்ஃவர்டு பிளாக்) கிஷ்தி கோஷ்ஸ்வாமி (ஆர்எஸ்பி) யையும் தர்மசங்கடத்தில் ஆழ்த்த நான் விரும்பவில்லை. ஆனால் எங்களிடம் அவர்கள் கூறிய வார்த்தைகள் என் நினைவில் அப்படியே இருக்கின்றன. அதை நான் இங்கே சொல்லி அவர்களை சங்கடத்தில் ஆழ்த்தவிரும்பவில்லை.

திரிணமூல் கட்சியுடன் நாங்கள் கூட்டு சேர்ந்ததன் இரண்டாவது காரணம், நாங்கள் அவர்களை ஆதரிக்காமலிருந்திருந்தால்கூட அவர்கள் தேர்தலில் வென்றிருப்பார்கள் என்பதை நாங்கள் அறிவோம். ஆனால், திரிணமூல் தலைமையால் இதை புரிந்துகொள்ள முடியவில்லை. மார்க்சிய முறையியலின் அடிப்படையில் பொதுமக்கள் மனநிலையை ஆய்வு செய்ததன்மூலம் எங்களால் இதை உணரமுடிந்தது. தேர்தல் பிரச்சாரத்தின்போது மார்க்சிசம், இடதுசாரி வாதத்தின்மீது திரிணமூல் தாக்குதல் தொடுக்கும் என்பதையும் எங்களால் புரிந்துகொள்ள முடிந்தது. மாநிலத்தில் தேர்தலானது மார்க்சிய விரோத, இடதுசாரி விரோத அலையாக இருக்கும் என்பதையும் நாங்கள் அறிந்திருந்தோம்.

இடது முன்னணி அரசாங்கத்திற்கெதிராக பொதுமக்கள் கருத்து வேகமாக வளரக்காரணமான சிங்கூர், நந்திகிராம் போராட்டங்களில் எங்கள் கட்சி வகித்த மிக முக்கிய பங்கின் காரணமாக எங்களுடன் கூட்டுவைக்க திரிணமூல் விரும்பியது. இந்த சூழ்நிலையில் தேர்தல் லாபங்களுக்காக எங்களுடன் கூட்டு வைக்கவேண்டிய தேவை திரிணமூல் காங்கிரஸ் கட்சிக்கு ஏற்பட்டது. இரண்டாவதாக, தேர்தலில் தனியாக போராடுவதன்மூலம் எங்கள் கட்சி குறைந்த வாக்குகளையே பெறுவதாக இருந்தாலும் மக்களிடையே மிகுந்த மரியாதையையும் நம்பகத்தன்மையையும் பெற்றிருக்கிறது. எனவே எங்களுடன் எந்தக்கட்சி கூட்டுவைத்தாலும் அது அந்த கட்சிக்கு உதவுகிறது. மார்க்சிசம் – லெனினிசத்தை தாக்குவதிலிருந்து தன்னைக் கட்டுப்படுத்திக் கொண்டால் மட்டுமே கூட்டணி வைத்துக்கொள்வோம் என திரிணமூல் கட்சிக்கு நாங்கள் நிபந்தனை விதித்தோம். அந்நிபந்தனையை திரிணமூல் ஏற்றுக் கொண்டது. சிங்கூர், நந்திகிராம் போராட்டங்களின் பெருமை முழுவதையும் திரிணமூல் கட்சி அபகரித்துக் கொள்ளக்கூடாது எனவும் நாங்கள் விரும்பினோம். படுகொலைகளையும் பெருமளவு பலாத்காரங்களையும் நடத்திய இடது முன்னணி ஆட்சியிலிருந்து அகற்றப்படவேண்டும், இரண்டாவதாக, மார்க்சிசம்–லெனினிசத்திற்கு எதிராக தேர்தல் பிரச்சாரம் நடத்தப்படுவதை தடுக்க வேண்டும், மூன்றாவதாக, சிங்கூர், நந்திகிராம் போராட்டங்களின் பெருமை அனைத்தையும் திரிணமூல் பறித்துக்கொள்வதை அனுமதிக்கக் கூடாது என்ற இந்த மூன்று நோக்கங்களை நாங்கள் கொண்டிருந்தோம். ஒரு வாதத்திற்காக எமது கட்சியின் பலத்தை புறந்தள்ளிவிட்டு, நாம் திரிணமூல் கட்சியை ஆதரிக்காதிருந்தால் இடது முன்னணி மீண்டும் அதிகாரத்திற்கு வந்திருக்குமா? இடது முன்னணியின் முதலமைச்சர் 26,000 வாக்குகள் வித்தியாசத்தில் ஒரு அரசு அதிகாரியிடம் ஏன் தோற்றார்? அந்த நேரத்தில் மக்களுடைய மனநிலை என்னவாக இருந்தது? 34 வருடங்கள் அதிகாரத்தில் இருந்ததன்மூலம் என்ன நிலைமையை அவர்கள் ஏற்படுத்தியிருக்கிறார்கள்? அவர்கள் தோற்கடிக்கப் படவேண்டும் என நாங்கள் விரும்பியது உண்மையே. அதே சமயம் மார்க்சிச, லெனினிச சித்தாந்தத்தின் மீது எந்த தாக்குதலும் வராதிருப்பதை உறுதிப் படுத்திக்கொள்ள நாங்கள் விரும்பினோம். எங்கள் கட்சி ஊழியர்களின் ரத்தத்தால் வளர்த்தெடுக்கப்பட்ட சிங்கூர், நந்திகிராம் போராட்டங்களின் பெருமை முழுவதும் திரிணமூல் கட்சிக்கு சென்று விடாதிருக்கவும் நாங்கள் விரும்பினோம்.

மேலும், திரிணமூல் கட்சி அதிகாரத்தில் இருக்கவும் நாங்கள் விரும்பினோம். அப்பொழுதுதான் அதன் உண்மையான முகத்தை விரைவில் மக்கள் காணநேரிடும். தற்போது மிகக் கடினமான வழியில் மக்கள் அதை உணர்ந்து வருகிறார்கள். 1979திலிருந்து இடது முன்னணி அரசாங்கத்திற்கெதிராக, அச்சுறுத்தும் விலைஉயர்வு, போக்குவரத்து – மின் கட்டண உயர்விற்கெதிராக, ஆங்கிலம் மற்றும் பாஸ்–பெயில் முறையை ஆரம்ப மட்டத்திலிருந்து மீண்டும் அமுல்படுத்துவது போன்ற பல்வேறு கோரிக்கைகளுக்கான போராட்டங்களை வளர்த்தெடுப்பதற்காக எமது கட்சியின் தொண்டர்கள் ரத்தம் சிந்தியிருக்கிறார்கள், ஏன் உயிரையும் கொடுத்திருக்கிறார்கள் என்பதை நினைவுபடுத்த விரும்புகிறேன். இந்த போராட்டங்கள் 20 ஆண்டுகளாக தொடர்ந்தன. அப்போது திரிணமூல் காங்கிரஸ் கட்சி உதயமாகவில்லை. அப்போது சிபிஐ (எம்) வுடன் உறவுகொண்டிருந்ததற்காக காங்கிரஸ் கட்சியின் பெயர் முழுமையாக கெட்டு இருந்தது. மனவேதனையுற்றிருந்த காங்கிரஸ் தொண்டர்களைக் கொண்டு திரிணமூல் கட்சி உருவாக்கப்பட்டது. எமது கட்சியின் வளர்ச்சியை அழிப்பதற்காக பூர்ஷ்வா ஊடகங்கள் அக்கட்சிக்கு மிகப்பெரிய விளம்பரத்தை கொடுத்தன. மக்களை குழப்புவதற்காக திரிணமூலின் தலைவருக்கு “நெருப்புப் பெண்” “போராடும் தலைவர்” என்றெல்லாம் அடைமொழி கொடுத்து ஊடகங்கள் பெரும் பிரச்சாரம் செய்தன. திரிணமூல் எதிர்க்கட்சியாக இருந்திருந்தால், அப்படிப்பட்ட மாயையில் இன்றும்கூட மக்கள் ஆழ்த்தப்பட்டுக்கொண்டிருப்பார்கள். எனவே இயக்கங்களின் நலனை முன்னிட்டு அப்படிப்பட்ட மாயையை அகற்றுவது தேவையாக இருந்தது.

திரிணமூலுடன் கூட்டு இருந்தபோதிலும், சென்ற பாராளுமன்ற தேர்தலில் காங்கிரஸிற்கெதிராக நாங்கள் வேட்பாளர்களை நிறுத்தினோம். அதனால்தான் காங்கிரஸ் எங்களை மூர்க்கத்தனமாக தாக்கியது. தேர்தலுக்குப் பின்பு, காங்கிரஸுடன் திரிணமூல் அரசாங்கத்தை அமைத்ததால் நாங்கள் அதை எதிர்த்தோம். எங்கள் ஒரேஒரு பாராளுமன்ற உறுப்பினர் தோழர் தருண் மண்டல் அவர்கள் எதிர்வரிசையில் அமர்ந்தார். ஒரு புரட்சிகரக் கட்சியின் கண்ணோட்டத்துடன் அவர் தனது உரிய பங்கை ஆற்றினார். இவற்றையெல்லாம் நீங்கள் அறிவீர்கள். சென்ற சட்டமன்ற தேர்தலில் நாங்கள் ஏற்கெனவே வெற்றிபெற்றுள்ள அதே இரண்டு தொகுதிகளை மட்டும் எங்களுக்கு தருவதாக திரிணமூல் எங்களிடம் கூறியது. அமைக்கப் படவுள்ள மேலவையில் எங்களுக்கு பதவிகளை தருவதாக திரிணமூல் கூறியது. நாங்கள் மறுத்துவிட்டோம். மேலவை அமைப்பதை நாங்கள் எதிர்ப்பதாக கூறினோம். மேலவை அமைப்பது குறித்து திரிணமூல் சிந்தித்துவருவதாக எங்கள் மூலமே மக்கள் முதலில் தெரிந்துகொண்டனர். சென்ற தேர்தலில் நாங்கள் எங்கள் குல்தலி தொகுதியை இழந்தோம். நாங்கள் தோற்கடிக்கப் பட்டோம் என்பதே உண்மை. ஏனெனில், அங்கு திரிணமூல் சிபிஐ(எம்)மிற்கு வாக்களித்தது. இதன் பின்னணியில் கருவியாக செயல்பட்டது அதன் மாநில தலைவர்களா அல்லது வட்டார தலைவர்களா என்பதை அவர்கள்தான் கூறவேண்டும். ஜாய்நகர் தொகுதியில் திரிணமூல் செல்வாக்கு

தொடர்ச்சி 6ம் பக்கம்

# பீஹார் மக்களுக்கு வாழ்த்துக்கள்

*பீஹார்சட்டமன்ற தேர்தல் முடிவுகள் குறித்து எஸ்யுசிஐ (கம்யூனிஸ்ட்) கட்சியின் பொதுச் செயலாளர் தோழர் பிரவாஸ் கோஷ் அவர்கள் 9–11–2015 அன்று வெளியிட்ட அறிக்கை:*

“பீஹார் சட்டமன்ற தேர்தல் முடிவுகளானது பாஜகவின் கொடிய, வகுப்புவாத மற்றும் முழுக்கமுழுக்க மக்கள் விரோத அரசியலுக்கு எதிரான தீர்மானகரமானதொரு மக்கள் தீர்ப்பாகும். மோடி ஆட்சியின்கீழ் வளர்ச்சி என்ற போலி கோஷத்திற்கு மத்தியில் தீவிர வகுப்புவாத பிரச்சாரத்தை சங்பரிவாரங்கள் செய்தன. ஆனாலும் பிஹார் மக்கள் இந்த கொடிய விளையாட்டை கண்டுகொண்டு தேர்தலில் பாஜகவை தீர்மானகரமாக புறக்கணித்துள்ளனர். இதற்காக பிஹார் மக்களை நாங்கள் வெகுவாக பாராட்டுகிறோம். பாஜகவின் தோல்வியென்பது பீஹார் மக்களின் விருப்ப மட்டுமல்ல, இந்தியா முழுவதுமுள்ள மதசார்பற்ற, ஜனநாயக எண்ணங்கொண்ட மக்களின் விருப்பமுமாகும்.

இந்த மகா கூட்டணியின் அங்கத்தினர்கள் கடந்த காலங்களின் பல்வேறு சமயங்களில் மத்தியிலோ அல்லது மாநிலத்திலோ ஆளும் கட்சிகளாக இருந்தனர், மேலும் அவர்கள், மதசார்பற்றவர்களாகவோ அல்லது ஜனநாயகவாதிகளாகவோ, மக்கள் சார்பானவர்களாகவோ ஒருபோதும் இருக்கவில்லை என அவர்களது பதிவேடுகள் காட்டுகின்றன என்பதும் கவனிக்க வேண்டியதாகும். சக்திவாய்ந்த ஒன்றுபட்ட இடது–ஜனநாயக மாற்று இல்லாததின் காரணமாக மக்கள் தேர்தலில் இந்த மகா கூட்டணிக்கு வாக்களிக்க வேண்டியதாயிருந்தது. இந்த மகா கூட்டணியானது ஒரு முற்போக்கான சக்தி இல்லை என்றபோதிலும், தற்போதைய சூழ்நிலையில் அதன் வெற்றியானது இந்து அடிப்படைவாதிகளின் மூர்க்கத்தனமான வளர்ச்சிக்கு ஒரு குறிப்பிட்ட அளவிலான தடையை நிச்சயம் ஏற்படுத்தும் என நாங்கள் நம்புகிறோம்.

ஆனால், சக்திவாய்ந்த ஒன்றுபட்ட இடதுசாரி, ஜனநாயக இயக்கத்தின்மூலம் மட்டுமே நாட்டில் வளர்ந்துவரும் பாசிச அபாயத்தை தடுக்க முடியும்.”

## இடதுசாரி ஒற்றுமை குறித்து

# ஆறு இடதுசாரி கட்சிகளின் கூட்டியக்கத்தை வளர்த்தெடுக்க எஸ்யுசிஐ (கம்யூனிஸ்ட்) உறுதிபூண்டுள்ளது

5ம் பக்கத் தொடர்ச்சி

பெற்ற பகுதிகளில் நாங்கள் முற்றிலும் எந்த வாக்கு களையும் பெறவில்லை. மேற்கு வங்கத்தில் எங்களுக்கு மந்திரி பதவிகளைத் தருவதாக திரிணமூல் கூறியது. நாங்கள் மறுத்துவிட்டோம்.

அரசாங்க அதிகாரத்தில் திரிணமூல் அமர்ந்தபின் தெருவில் இறங்கி முதலில் போராடுபவராக நாங்கள் மட்டுமே இருப்போம் என சட்டமன்ற தேர்தலுக்கு முன்பே நாங்கள் அறிவித்தோம். உண்மையும் அதுவே. திரிணமூலை எதிர்த்து முதலில் போராட்டங்களை நடத்தியது நாங்களாகவே இருந்தோம். 8ம் வகுப்பு வரை பாஸ்–பெயில் முறையை மீண்டும் அமுல் படுத்தக்கோரி எங்களது மாணவர் பிரிவு அகில இந்திய ஜனநாயக மாணவர் சங்கம் (ஏஐடிஎஸ்ஓ) செப் 8, 2011 அன்று மிகப்பெரிய பேரணியை நடத்தியது. அதே வருடம் செப் 26ம் தேதி கல்வி யாளர்களின் பேரணியை நாங்கள் நடத்தினோம். நவம்பர் 8 அன்று தொழிலாளர்களும் பணியாளர் களும் வெகுஜன சட்டமீறலில் பங்கெடுத்தனர். செப் 12 அன்று பாஸ்–பெயில் முறையை மீண்டும் அமுல்படுத்துதல் உள்ளிட்ட பல்வேறு கல்வி கோரிக்கைகளுக்காக கல்லூரி சதுக்கத்திலிருந்து தேசப்பிரியா பூங்கா வரை நானே என் இந்த வயதில் நடந்து சென்றேன். அந்நேரத்தில் ஆர்எஸ்பி, பார்வேர்டு பிளாக்கின் இயக்கம் எங்கிருந்தது? அப்போதிருந்து திரிணமூல் அரசாங்கத்திற்கெதிராக பல்வேறு கோரிக்கைகளுக்காக வட்டார, மாவட்ட, மாநில அளவில் தொடர்ந்து போராட்டங்கள் எமது கட்சியால் நடத்தப்பட்டன. சமீபத்தில், பிப் 5 அன்று நடைபெற்ற வெகுஜன சட்டமீறல் இயக்கத்தின் போது திரிணமூல் அரசாங்கத்தின் போலீஸ் அராஜகத்தால் எங்களுடைய தொண்டர்கள் இருவர் தங்களுடைய கண்களையே இழந்தனர். அவர் களுடைய சிகிச்சை செலவுகளுக்காக பொது மக்களிடமிருந்து நன்கொடைகளை நாங்கள் திரட்டி வருகிறோம்.

இம்முறையும்கூட பாராளுமன்ற தேர்தலில் இரண்டாவது முறையாக எமது எம் பி பதவியை திரும்ப பெற்றிருப்போம். திரிணமூல் அந்த வாய்ப்பை எங்களுக்கு வழங்கியது. நாங்கள் தோற் கடிக்கப்படுவோம் என்பதை நாங்கள் நன்கு அறிந்தும் அந்த வாய்ப்பை மறுத்துவிட்டோம். ஓட்டுக்காக இருப்பது எங்களுடைய கட்சியல்ல. கல்கத்தாவில் நடைபெற்ற ஏப்ரல் 24 கூட்டத்தில் எம்எல்ஏ, எம்பிக்களின் எண்ணிக்கையை அதி கரித்துக் கொள்ளும் கட்சியல்ல எங்கள் கட்சி என்று நான் கூறினேன். எவ்விலை கொடுத்தேனும் வெற்றி பெறவேண்டும் என நினைப்பவர்கள் நாங்களல்ல. மார்க்சிசம்–லெனினிசம் தோழர் சிப்தாஸ் கோஷ் சிந்தனைகளால் உத்வேகங்கொண்டு, புரட்சிகர நோக்கத்துடன் நாங்கள் போராடுகிறோம். மக்களி டையே பாராளுமன்ற மாயை எதுவரை இருக்கிறதோ அதுவரை அம்மாயையை போக்குவதற்காக தேர்தல் களத்திலும் நாங்கள் போராடுகிறோம். நாங்கள் வெற்றிபெற்றால் நல்லதே. இல்லையெனில் இழப்பதற்கு எதுவும் இல்லை. பத்து இருபது எம்எல்ஏ, எம்பிக்களைவிட குதிராம், பகத்சிங் போன்ற குணாதிசயங்கள் மிகவும் மதிப்பு வாய்ந்தவை என நாங்கள் கருதுகிறோம். துப்பாக்கித் தோட்டாக்களையும் எதிர்கொண்டு போராடக்கூடிய ஆயிரக்கணக்கான தொண்டர்களை இன்றும் நாங்கள் பெற்றிருக்கிறோம். மார்க்சிசம் லெனினிசம் தோழர் சிப்தாஸ் கோஷ் சிந்தனை களின் மீது எழுந்துநிற்கும் கட்சியாகும் எங்கள் கட்சி. தேர்தல் ஆதாயங்களுக்காக நாங்கள் கூட்டணி சேரமாட்டோம் என்று சிபிஐ (எம்) கட்சிக் மாநாட்டில் நான் மிகவும் வலியுறுத்திக் கூறினேன். போர்குண மிக்க வர்க்க வெகுஜன போராட்டங்களை வளர்த் தெடுக்கவே நாங்கள் இடதுசாரி ஒற்றுமையை விரும்புகிறோம். வர்க்க, வெகுஜன போராட்ட நெருப்பில்தான் ஒரு புரட்சிகர கட்சியின் பலம் இருக்கிறது, பாராளுமன்றத்தில் உறுப்பினர்களின் எண்ணிக்கையில் இல்லை என்ற லெனினின் போதனையையும் அனைவருக்கும் நான் நினைவு கூறினேன்.

ஆர்எஸ்பி, பார்வேர்டு பிளாக் ஆகிய கட்சிகளின் நிலைமை என்ன? நான் அதை சொன்னால் அவர்கள் காயப்படுவார்கள். 1950களில் எமது கட்சி ஒரு சிறிய கட்சியாகும். அவர்கள் எங்களை ஏளனஞ் செய்வர். அசோக் கோஷின் மறைவிற்குப்பின் பார்வேர்டு பிளாக் உதிர்ந்துவிடுமோ என நான் கவலையுறுகிறேன். ஆனால் தற்போதே, அவர் உயிருடன் உள்ளபோதே அக்கட்சி குழப்பத்தில் உள்ளதாக நான் காண்கிறேன். ஆர்எஸ்பியின் நிலைமை என்ன? சிபிஐ (எம்) கருணையால் அவர் கள் தங்கள் எம்எல்ஏ, எம்பிக்களின் எண்ணிக்கையை உயர்த்திக்கொண்டுள்ளனர். எந்தக் கட்சியின் வாலையும் பிடித்துக்கொண்டு செல்லும் பழக்கம் எங்களுக்கில்லை. எம்எல்ஏ, எம்பிக்களின் எண்ணிக்கையிலல்லாமல் அமைப்புரீதியான பலத்தில் மேற்கு வங்கத்தில் சிபிஐ (எம்)மிற்கு அடுத்த படியாக நாங்கள் இருக்கிறோம் என்று அடக்கத் துடன் எங்களால் சொல்லிக்கொள்ள முடியும். இந்த உண்மையை யாரால் மறுக்கமுடியும்?

எங்களைவிட சிபிஐ (எம்) அதிக பலமுள்ளதாக இருப்பினும், 34 வருடங்கள் ஆட்சியிலிருந்த பின்பும் அக்கட்சியின் பெரும்பாலான தொண்டர்கள் செயலிழந்துவிட்ட நிலைமையை இன்று அக்கட்சி அடைந்துள்ளது. சிபிஐ (எம்)ன் உயர்மட்ட தலைவர் களில் ஒருவரிடம் நான் கேட்டேன்: '1972ல் காங்கிரஸி டமிருந்து பெரும் தாக்குதல்களை நீங்கள் சந்தித்தீர்கள் நாங்களும்கூட சந்தித்தோம். ஆனால் அந்த நேரத்தில் கூட இன்றுள்ள அபாயநிலையில் நீங்கள் இல்லை. 34 வருட ஆட்சியை அனுபவித்தபின்பும் களத்திற்கு செல்ல உங்கள் தொண்டர்களுக்கு உத்வேகமூட்ட உங்களால் ஏன் முடியவில்லை? அதைப் போன்ற அபாயகரமான நிலை இன்று இல்லை. அவருடைய பதிலை இங்கு நான் சொல்லக்கூடாது. சிபிஐ (எம்), சிபிஐ, சிபிஐ (எம் எல்) லிபரேஷன், எஸ்யுசிஐ (கம்யூனிஸ்ட்) ஆகிய கட்சிகள் அகில இந்திய அளவில் அமைப்புக்களை பெற்றிருக்கின்றன. ஆர்எஸ்பி, பார்வேர்டு பிளாக் ஆகியவற்றின் இருப்பின் நிலை என்ன? நாம் அனைவரும் அனைத்து மாநிலங் களிலும் சமமான பலத்தை பெற்றிருக்கக்கூடிய சூழ்நிலை இல்லை. சில இடங்களில் நாங்கள் அதிக அமைப்பை பெற்றிருக்கக்கூடிய சூழ்நிலை இல்லை. வேறு சில இடங்களில் மற்றவர்கள் எங்களைவிட அதிக அமைப்பை பெற்றிருக்கிறார்கள். இது இவ்வாறு இருக்கின்றது: கேரளாவில் ஆர்எஸ்பி காங்கிரஸ் ஆதரவில் ஒரு எம்பியை பெற்றிருக்கிறது. இது மாதிரியான அரசியலை நாங்கள் பின்பற்று வதில்லை. நாங்கள் யாருடன், எந்த நோக்கத்திற்காக பேரம் பேசுகிறோம்? அந்த வகைப்பட்ட அரசியல் எங்களுடையதல்ல.

சிலிகுரி மாடல், பிதான்நகர் மாடல் என்ற பேச்சு ஊடகங்களில் அடிபடுகிறது. தற்பொழுது அசான் சால் மாடல் என்று நான் கேள்விப்படுகிறேன். சிபிஐ (எம்)மிற்கு காங்கிரஸுடன் ஒற்றுமை எங்கும் நிலவுகிறது. திரிணமூலுக்கு எதிராக கீழ் மட்டங் களில் நகராட்சி, பஞ்சாயத்து தேர்தல்களில் பாஜகவுடனும்கூட உறவு நிலவுகிறது. தோழர் சௌமன் போஸுடனான விவாதத்தின்போது அவர்களுடைய இம்மாடல்களெல்லாம் பயங்கர வாதத்திற்கும் வாக்கு கொள்ளைக்கும் எதிரானதாகும் என பிமன் போஸ் பதிலளித்தார். ஆனால் இந்த மாடல்களெல்லாம் அறிவிக்கப்படாத தொகுதி உடன் பாடே தவிர வேறொன்றுமல்ல என்ற கருத்து பொது மக்களிடையே நிலவுகிறது. 'நாங்கள் ஒரு தொகுதி யில் உங்களுக்கு வாக்களிக்கிறோம், நீங்கள் மற்றொரு தொகுதியில் எங்களுக்கு வாக்களியுங்கள்' என்பது தான் இந்த தொகுதி உடன்பாடாகும் (seat adjustment). எது சரியென்பதை யதார்த்தம் மட்டுமே வெளிக்கொணரும். சமீபத்தில் சிபிஐ (எம்)ன் பொதுச் செயலாளர் அவருடைய உரையில் இதை சொல்லியிருக்கிறார். முன்பு பாஜகவுக்கு எதிராக காங்கிரஸை ஆதரித்தனர். அவர்களின் கருத்துப்படி காங்கிரஸிற்குள்ளேயே 'மதசார்பற்ற' மற்றும் 'ஜனநாயக' சக்திகள் இருக்கின்றன. மார்க்சிய பாதை என்ற அவர்களுடைய தத்துவார்த்த இதழும்கூட அதே வழியையே ஆமோதித்தது. இவையெல்லா வற்றையும் நாங்கள் கவனித்துள்ளோம். இவை யெல்லாம் எங்குபோய் முடியும் என்பதை நாம் அறியோம். ஆனால் இந்த 6 கட்சி ஒற்றுமையை இறுதிவரை பாதுகாக்க எம்மால் முடிந்த அனைத்தையும் நாங்கள் செய்வோம்.

அடுத்த தேர்தலுக்கு நாங்கள் தயாராக இருக் கிறோம். நாங்கள் சில தொகுதிகளில் வெற்றிபெறக் கூடும். ஆனால், ஆள்பலம், பணபலம், ஊடகம், நிர்வாக சக்திகள் எல்லாம் ஒன்றுசேர்ந்து எங்களுக் கெதிராக வேலைசெய்யலாம், அதனால் நாங்கள் ஒரு தொகுதியில்கூட வெற்றிபெற முடியாமல் போகலாம். ஆனால் ஒரு புரட்சிகரக் கட்சி என்ற முறையில் அதற்கெல்லாம் நாங்கள் கவலைப்படப் போவதில்லை. நாங்கள் போராட்ட இயக்கங்களை வளர்த்தெடுத்துக் கொண்டிருக்கிறோம், இனிமேலும் வளர்த்தெடுப்போம். எங்கள் பலம் அதிகரித்துக் கொண்டிருக்கிறது. மேற்கு வங்கத்தில் மட்டுமல்ல, இந்தியா முழுவதும் அதிகரித்துக்கொண்டிருக்கிறது. 'மாற்றம்' என்று சொல்லக்கூடிய அலையில் தலை வர்களை விடுங்கள், எங்களின் ஒரேஒரு தொண்டர் கூட வேறுபக்கம் சாய்ந்துவிடவில்லை. எங்களுடைய கட்சி வேறுவகைப்பட்ட ஒரு உலோகத்தால் வார்த் தெடுக்கப்பட்ட ஒரு புரட்சிகரக் கட்சியாகும். நாங்கள் விரிந்து பரவும் சக்தியாகும். ஆனால் இது போதுமான தல்ல. இன்னும் பலமடங்கு நாங்கள் எங்கள் பலத்தை அதிகரிக்கவேண்டிய தேவையிருக்கிறது. மாநிலத்தின் பல்வேறு முனைகளில் நாங்கள் வளர்த் தெடுத்துக்கொண்டிருக்கிற போராட்டங்கள் அடங்கிய பட்டியலை நாங்கள் உங்களுக்கு அளித்திருக்கிறோம். திரிணமூல் காங்கிரஸ் பதவிக்கு வந்தபின் நாங்கள் என்னென்ன போராட்டங்களை எடுத்திருக்கிறோம், அதேபோல மற்றவர்கள் என்ன செய்திருக்கிறார்கள் என்பதை தயவுசெய்து ஒப்பிட்டுப் பாருங்கள். இதுவரை நாங்கள் நடத்தியிருக்கிற போராட்டங் களின் இடம் மற்றும் நேரம் குறித்த விவரங்கள் இந்தப் பட்டியலில் குறிப்பிடப்பட்டுள்ளது.

நாங்கள் முன்மொழிந்தபடி, யுத்தவெறி யுஎஸ் அதிபரின் இந்திய வருகைக்கெதிராக நாடுமுழு வதும் எதிர்ப்பு இயக்கத்தை நடத்த டெல்லியில் நடைபெற்ற 6 கட்சிகளின் கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது. அதைப்போலவே, எங்களுடைய வலியுறுத்தலின்படி பாஜக அரசாங்கத்தின் ஊழலுக் கெதிராக நாடுமுழுவதும் ஆர்ப்பாட்ட இயக்கங்கள் நடத்தப்பட்டது. ஒவ்வொரு மாநிலத்திலும் எங்களுடைய செயற்திறமிக்க பங்களிப்பால் செப் 2 அகில இந்திய வேலைநிறுத்தம் முழு வெற்றி பெற்றது. எங்கெல்லாம் சாத்தியமோ அங்கு மற்றவர் களையும் ஈடுபடுத்துகிறோம். எங்கு இயல வில்லையோ, அங்கு தனியாகவே நாங்கள் செய்கி றோம். எங்கள் தொண்டர்கள் பிரச்சாரத்தை கொண்டுசெல்லாத நகரம் கிராமம் அல்லது சந்தை எங்கும் இல்லை. இந்த மாநிலத்தின் மக்களே அதற்கு சாட்சி.

6 கட்சிகளின் கூட்டு இயக்கத்தை வளர்தெடுப்பது குறித்து பிரகாஷ் காரத்திடம் நாங்கள் அளித்த வாக்குறுதிக்கு உரிய மரியாதை வழங்கப்படும். மாநிலத்தில் ஏகாதிபத்தியத்திற்கெதிரான, வகுப்பு வாதத்திற்கெதிரான எந்த போராட்டத்திலும் நாங்கள் ஒன்றுசேர்வோம். எந்த பிரச்சினையானாலும் அது உரியதுதான் என நாங்கள் கருதினால் நிச்சயம் அதில் சேருவோம். ஆனால், அது உகந்தது அல்ல என்று நாங்கள் கருதினால் அதில் சேரமாட்டோம். பீஹார் தேர்தலில் சில தொகுதிகளில் உடன்பாடு (புரிதல்) ஏற்பட்டிருக்கிறது. வேறுசில தொகுதிகளில் நட்புரீதியான போட்டி உள்ளது. டெல்லி தேர்தலிலும் கூட சில தொகுதிகளில் உடன்பாடும் மற்றசில தொகுதிகளில் நட்புரீதியான போட்டியும் இருந்தது.

நான் உடல்நலமின்றி இருந்தபோது பிமன் போஸ் என்னை பார்க்க வந்தார். மாணவர் இயக்கங்களின் நாட்களிலிருந்தே பிமன் போஸுடன் எனக்கு தொடர்பிருக்கிறது. எனவே, வெறும் மரியாதை நிமித்தமான வருகை என்று அதை நான் கருத வில்லை. எனவேதான் வாக்குறுதியை நிறை வேற்றாதது குறித்து எங்கள் மீது அவர் முன்னிலை யிலேயே எவ்வாறு குற்றச்சாட்டப்பட்டது என்று நான் வியப்புறுகிறேன். எங்கள் நிலைப்பாடு குறித்து அவர் நன்கு அறிவார். அடுத்த தேர்தலில் நமக்குள் தொகுதி உடன்பாடு இருக்கும் என அவரிடம் வெளிப்படையாகவே நான் கூறினேன். ஆனால் அவ்வாறான உடன்பாடு தெற்கு 24 பர்கானாக்கள் மற்றும் கிழக்கு மிட்னாபூர் மாவட்டங் களில் இருக்காது. தெற்கு 24 பர்கானா மாவட்டத் தில் எங்கள் கட்சியின் தலைவர்களும் தொண்டர் களும் சிபிஐ (எம்) கட்சியினரால் கொல்லப் பட்டுள்ளனர். எனவே அங்கு எந்த தொகுதி உடன்

தொடர்ச்சி 7ம் பக்கம்

# பாஜக அரசாங்கத்தின் மற்றுமொரு மக்கள் விரோத முடிவை எஸ்யுசிஐ (கம்யூனிஸ்ட்) வன்மையாகக் கண்டிக்கிறது

*எஸ்யுசிஐ (கம்யூனிஸ்ட்) கட்சியின் பொதுச் செயலாளர் தோழர் பிரவாஸ் கோஷ் அவர்கள் நவ 8, 2015 அன்று வெளியிட்ட அறிக்கை:*

பிஹார் சட்டமன்ற தேர்தல்கள் முடிந்த உடனேயே பாஜக அரசாங்கம் பாராளுமன்றத்தைப் புறக்கணித்து, நிர்வாக உத்தரவுகளின்மூலம் ஒரு தொடர் மக்கள் விரோத நடவடிக்கைகளை அறிவித்துள்ளது. இந்நடவடிக்கைகள் 1) சேவை வரியானது 14% திலிருந்து 14.5% ஆக அதிகரிக்கக் கூடியவகையில் அனைத்து சேவைகளின்மீதும் 0.5% 'ஸ்வச் பாரத் செஸ்' வரி விதிப்பது, 2) ரயில் பயணச் சீட்டு ரத்துக் கட்டணம் இருமடங்காக்குவது மற்றும் ரயில் புறப்படுவதற்கு 4 மணி நேரத்திற்குள் பயணச் சீட்டை ரத்துசெய்யவில்லையெனில் பணம் திரும்பத் தரபடமாட்டாது, 3) அரசாங்கத்தால் பரிந்துரைக்கப் பட்டுள்ள அதிக வருமானமீட்டும் குடும்பங்களுக்கு கேஸ் சிலிண்டர் மானியத்தை திரும்பப்பெறுவது உள்ளிட்டவைகளாகும்.

ஏற்கெனவே பிழிந்தெடுக்கும் வறுமை, வேலையின்மை மற்றும் விண்ணைமுட்டும் விலைவாசி உயர்வு ஆகியவற்றால் அழுத்தப்பட்டுக் கொண்டிருக்கும் மக்கள்மீது மிகப்பெரிய பொருளாதார சுமையை ஏற்றும் இம்மக்கள் விரோத நடவடிக்கைகளானது மத்தியிலுள்ள பாஜக அரசாங்கத்தின் மக்கள் விரோத – முதலாளித்துவ ஆதரவு குணாம்சத்தை மீண்டுமொருமுறை அம்பலப்படுத்தியுள்ளது. அனைத்து வகையிலும் அசுத்தங்கொண்ட ஒரு அரசாங்கம் அசுத்தத்திலிருந்தும் குப்பையிலிருந்தும் நாட்டை விடுவிப்பதாகக்கூறி மக்களை ஏமாற்ற முயற்சிப்பதைப் போன்ற கேலிக்குரிய விஷயம் வேறெதுவுமிருக்க முடியாது.

அதைப்போலவே, தாமாக முன்வந்து மானியத்தை விட்டுக்கொடுக்க மக்களுக்கு வேண்டுகோள் விடுக்கும் பிரச்சாரத்தை சில மாதங்களாக இந்த அரசாங்கம் கட்டவிழ்த்து விட்டுள்ளதன்மூலம் மலிவான தூய்மையான எரிபொருளை அனைவருக்கும் தருவதாகதான் அளித்த தேர்தல் வாக்குறுதியிலிருந்து பின்வாங்குவதற்கான தளத்தை உருவாக்கியுள்ளது. மிகவும் குறிப்பிடத்தக்கதென்னவென்றால், வாக்காளர்களிடமிருந்து பாதகமான தாக்கம்எதுவும் ஏற்படாதிருப்பதை உறுதிசெய்து கொள்ளும் வண்ணம் பிஹார் சட்டமன்றத் தோதல்கள் முடிவு பெற்றவுடன் இவ்வறிவிப்புகளெல்லாம் விடப் பட்டுள்ளதுதான்.

மக்களை மேலும் மோசடிசெய்யும் மேற்கூறிய நடவடிக்கைகளை யெல்லாம் மிகக்கடுமையாக எதிர்க்கும் அதேவேளையில், சரியான தலைமையின்கீழ் ஒரு சக்திவாய்ந்த ஒன்றுபட்ட அணிதிரட்டப் பட்ட மக்கள் இயக்கத்தை கட்டவிழ்த்து விடுவது மட்டுமே மத்திய அரசாங்கத்தின் அதிகரித்துவரும் மக்கள் விரோத நடவடிக்கைகளை தடுக்கமுடியும் என்பதை உணருமாறும் பொதுமக்களை வேண்டுகிறோம்.

# இடதுசாரி ஒற்றுமை . . .

*6ம் பக்கத் தொடர்ச்சி*

பாடும் செய்துகொள்ள முடியாது. கிழக்கு மிட்னாபூர் வரலாற்றுச்சிறப்புமிக்க விவசாயிகள் போராட்டம் நடந்த நந்திகிராம் உள்ள பிரதேசமாகும். எனவே, அங்கும் எந்த உடன்பாடும் செய்து கொள்ள முடியாது. சில தொகுதிகளில் உடன்பாடுஉள்ள அதேசமயத்தில் சில தொகுதிகளில் நட்புரீதியிலான போட்டியும் இருக்கும். உதாரணமாக, இடைத் தேர்தலில் மாநிலத்தின் சில பஞ்சாயத்துக்களில் ஒருசில தொகுதிகளில் நாங்கள் போட்டியிடுகிறோம். மாவட்ட, பிளாக் அல்லது காவல் நிலையங்கள் மட்டத்தில் பல போராட்டங்களை எங்கள் தொண்டர்கள் நடத்தியிருக்கிறார்கள். நேற்றுகூட, மிட்னாபூர் நகரத்தில் எங்கள் போராட்டத்தின்மீது தடியடி பிரயோகம் நடத்தப்பட்டிருக்கிறது. எங்கு நாங்கள் போட்டியிடவில்லையோ, அங்கு இடதுசாரி வேட்பாளருக்கு வாக்களிக்குமாறு நாங்கள் அனைவரையும் கேட்டுக்கொண்டிருக்கிறோம். ஆனால், காங்கிரஸுடனோ பாஜகவுடனோ இடதுசாரி வேட்பாளர்கள் ஏதேனும் ரகசிய உறவு கொண்டால் அவர்களுக்கு வாக்களிப்பது குறித்த பேச்சுக்கே இடமில்லை.

**பாஸ்–பெயில் முறையை பள்ளிகளில் மீண்டும் உடனடியாக அமுல்படுத்துதல் மற்றும் பிற கோரிக்கைகளுக்காக நவம்பர் 26, 2015 அன்று கொல்கத்தாவில் ஏஐடிஎஸ்ஓவும் ஏஐடிஒய்ஓவும் நடத்திய மாபெரும் பேரணி**




# பாசஞ்சர் ரயிலின் குறைந்தபட்ச கட்டணத்தை இருமடங்காக்கியதை எஸ்யுசிஐ (கம்யூனிஸ்ட்) வன்மையாகக் கண்டிக்கிறது

*எஸ்யுசிஐ (கம்யூனிஸ்ட்) பொதுச் செயலாளர் தோழர் பிரவாஸ் கோஷ் அவர்கள் நவ 18, 2015 அன்று வெளியிட்ட அறிக்கை:*

ஏழ்மையாலும் வறுமையாலும் சூறையாடப்பட்டுள்ள சாதாரண மக்களுக்கெதிரான யுத்தத்தை பாஜக தலைமையிலான மத்திய அரசாங்கம் அறிவித்துள்ளது தற்போது தெளிவாகியுள்ளது. சேவை வரியை இருமடங்காக்கியபின், தினசரி பயணிகள் குறிப்பாக வியாபாரிகள், வீட்டு வேலை செய்பவர்கள், இதுபோன்ற பெரும் துயரத்திலுள்ள மக்கட்பிரிவினரான மிகவும் ஏழைகள்மீது பாசஞ்சர் ரயிலின் குறைந்தபட்ச கட்டணத்தை ஒரே அடியில் ரூ 5லிருந்து ரூ 10ஆக அவர்கள் தற்போது இருமடங்காக்கியுள்ளனர்.

சாதாரண பயணிகள் மீதான இந்த மிகுந்த அடாவடித்தனமான பொருளாதார தாக்குதலை மிகக் கடுமையாக கண்டிக்கும் வேளையில் எதிர்ப்பு இயக்கம் என்ற மட்டத்திற்கு ஒரு அணிதிரட்டப்பட்ட போராட்டத்தை உடனடியாக கட்டவிழ்த்துவிடுமாறு அக்கறையுள்ள அனைவரையும் நாங்கள் கேட்டுக்கொள்கிறோம்.

# அமெரிக்காவின் ஓர்க்கர்ஸ் வொர்ல்டு பார்ட்டி . . .

*2ம் பக்கத் தொடர்ச்சி*

விருந்து மீள முடியாவண்ணம் முதலாளித்துவத்தை முட்டுச் சந்திற்கு இட்டுச்சென்றுள்ளது. எத்தகைய ஒட்டு வேலை–பழுதுபார்ப்பு அல்லது சீர்திருத்தம் செய்தாலும் இந்நெருக்கடியிலிருந்து முதலாளித்துவ அமைப்பு மீளவே முடியாது. மார்க்சிசம் போதித்தபடி அடக்குமுறை மற்றும் சுரண்டல் அமைப்பை புரட்சியின் மூலம் தூக்கியெறிவதும் முதலாளித்துவ உற்பத்தி உறவுகளை அகற்றிவிட்டு, அவ்விடத்தில் சோசலிச உற்பத்தி உறவுகளை ஏற்படுத்துவதும்தான் ஒரே தீர்வாகும். சுரண்டல் மற்றும் அடக்குமுறையிலிருந்து பொது மக்கள் விடுதலை பெற்றிட வேண்டுமாயின் அதற்கு இதுதான் ஒரே வழியாகும்.

உலகம் முழுவதிலுமுள்ள புரட்சியாளர்கள் யாவரும் மார்க்சிசம்– லெனினிசம் வெல்லற்கரிய ஒன்று என்பதை மக்களிடம் சந்தேகத்திற்கிடமின்றி தெளிவுபடுத்திடவும் அதன் போதனைகளை மக்களிடம் எடுத்துச்சென்று அதன்மூலம் இன்றைய நெருக்கடியின் உண்மையான குணாம்சம் மற்றும் அதிலிருந்து மீள்வதற்கான வழி குறித்து அவர்களை பயிற்றுவிப்பதும் இத்தருணத்தின் தலையாய தேவையென நாங்கள் ஆழமாக நம்புகிறோம். முதலாளித்துவ ஏகாதிபத்திய அரசுக்கெதிராக ஓர் நீண்ட நெடிய போரினை நடத்திட உழைக்கும் வர்க்கத்தை ஒன்றுதிரட்டிட முன்வருவதுதான் அனைத்து உண்மையான மார்க்சிஸ்ட்–லெனினிஸ்ட் கட்சிகளின் முதல் மற்றும் தலையாய கடமையாகும்.

சரியான சித்தாந்தம், உயர்ந்த ஒழுக்க நெறிகள் மற்றும் கலாச்சாரத்தினடிப்படையில் கட்டியமைக்கப்படும் போராட்டங்கள் வாயிலாக பாராளுமன்ற முறை மற்றும் தேர்தல்கள் குறித்து இன்னும் நிலவுகிற மாயையிலிருந்து உழைக்கும் வர்க்கத்தினை நாம் விடுவிக்க வேண்டும். இதுவே முதலாளித்துவ ஒழுங்கினை புரட்சியின் மூலம் தூக்கியெறியவும் சோசலிசத்தை நிறுவிடவும் அத்தியாவசிய முன்நிபந்தனையாயிருக்கின்ற தொடர்ந்த வர்க்க மற்றும் வெகுஜன போராட்டங்கள் மூலம் வர்க்க உணர்வை ஏற்படுத்துவதென்பதாகும். உங்களது மாநாடு இத்தகைய விஷயங்கள் மற்றும் பிற தொடர்புடைய பிரச்சினைகளையும் குறிப்பாக ஆப்பிரிக்க–அமெரிக்க மற்றும் குடிபெயர்ந்தவர்கள் கடுமையாக சுரண்டப்படுவது குறித்தும் உழைக்கும் வர்க்கத்தின் அரசியல் கண்ணோட்டத்திலிருந்து முழுமையான ஆய்வினை நிச்சயமாக செய்யும்.

முதலாளித்துவ–ஏகாதிபத்தியத்தின் கோட்டைத் தளமாய் விளங்கும் ஒரு மண்ணில், மூலதன ஆட்சியை உலகம் முழுவதும் ஏற்படுத்திட அரக்கத்தன ராணுவ இயந்திரமாக செயல்படும் ஒரு தேசத்தில் அனைத்து தடைகளையும் மீறி மார்க்சிச–லெனினிச பதாகையை உயர்த்திப் பிடித்திட ஓர்க்கர்ஸ் வொர்ல்டு பார்ட்டி மேற்கொண்டிருக்கும் இக்கடுமையான போராட்டத்திற்கு நாங்கள் எங்களது உளமார்ந்த பாராட்டுதல்களையும் முழுமையான ஆதரவினையும் மீண்டும் தெரிவித்துக்கொள்கிறோம்.

அமெரிக்காவின் ஆக்கிரமிப்பு, ஆட்சி கவிழ்ப்பு மற்றும் சதிவேலைகள் எங்கிருந்தாலும் அவையனைத்திற்குமெதிரான உங்களது உறுதியான நிலைபாட்டினைக்கண்டு நாங்கள் வியப்புடன் மதிப்புகொண்டுள்ளோம். உங்களது தேசிய மாநாடு முழு வெற்றிபெற நாங்கள் உண்மையாக வாழ்த்துகிறோம். உங்களது விவாதங்கள் குறிப்பிடத்தக்க வகையில் உலக கம்யூனிச இயக்கங்களுக்கு பங்களிக்குமென்றும் உங்களது எதிர்கால போராட்டங்கள் உலகிலுள்ள விடுதலை மற்றும் அமைதி விரும்பும் மக்களுக்கு என்றென்றும் ஊக்கமளிக்குமென்றும் நாங்கள் உறுதியாய் நம்புகிறோம்.

**பிரவாஸ் கோஷ்**
*பொதுச்செயலாளர்,*
*எஸ்யுசிஐ (கம்யூனிஸ்ட்)*
*அக்டோபர் 28, 2015*

Registered Newspaper
Posted at : Chennai Egmore RMS/1Patrika Channel
Posted on :
Publication 2nd Janauvary 2016

பாட்டாளி சிந்தனை

Post.Reg.No:TN/CCN/429/2015-17
WPP Licence No: TN/PMG(CCR)/WPP-373/2015-17
Registered with the Registrar of Newspapers for India No : 62018/88

## பள்ளிகளில் பாஸ்–பெயில் முறையை உடனடியாக மீண்டும் அமல்படுத்து

# புதுதில்லியில் மக்கள் நடத்திய கோரிக்கைப் பேரணி

நமது நாட்டில் பல ஆண்டுகளாக கொள்கை மாற்றங்கள் மூலம் கல்வியின் மீது தொடுக்கப்பட்டு வந்த தாக்குதல்கள் தற்போது மிக மோசமான விளைவை தெளிவாக புலப்படும் வகையில் ஏற்படுத்திவிட்டன. மத்திய அரசாங்கமே அதனை ஒப்புக்கொள்ளும் நிலைக்கு ஆளாகிவிட்டது. அதாவது, ‘அடிப்படை திறன்களைக்கூட குழந்தைகள் கற்றுக்கொள்ளவில்லை’, என்ற விவரமே அது. அதிர்ச்சி தரும் இந்த விளைவிற்குக் காரணம், ஏற்கெனவே முப்பதாண்டுகளாக கல்வியைச் சீரழித்துவந்த கொள்கைகளும் சட்டங்களும் போதாதென்று, இதற்கு முன் மத்தியில் இருந்த காங்கிரஸ் தலைமையிலான ஐமு கூட்டணி அரசாங்கம் தேசிய அளவில் கொண்டுவந்த கல்வி உரிமைச் சட்டம் 2009 (RTE 2009) ஆகும். அனைத்து மாநில அரசாங்கங்களும் இதனை அமுலாக்கின. இதன்படி பள்ளிகளில் ஒன்றாம் வகுப்பிலிருந்து எட்டாம் வகுப்புவரை ‘தடையில்லா தேர்ச்சி முறை’ அதாவது ஆண்டுத்தேர்வின் மூலம் பாஸ்–ஃபெயில் ஆக்கும் முறை நீக்கப்பட்டு, அனைத்து மாணவர்களும் தடையில்லாமல் மேல் வகுப்பிற்கு அனுப்பப்படும் முறை கொண்டுவரப்பட்டது. எழுதவும் படிக்கவும் கூட்டவும் கழிக்கவும் தெரியாமல் பெரும்பாலான மாணவர்கள் பள்ளி இறுதியாண்டு வரை வந்து விடுகின்றனர்.

இந்த மோசமான நிலைமைக்கான பொறுப்பிலிருந்து தற்போதைய பாஜக மத்திய அரசாங்கத்தையும் விலக்கி விடமுடியாது. மேற்கண்ட அப்பட்டமான உண்மையை ஒப்புக்கொள்ள இவர்களுக்கு ஓராண்டுக்கும் மேல் ஆனது. நாடு முழுவதும் பெற்றோர்களும் ஆசிரியர்களும் மாணவர்களும் தெரிவித்து வந்த கடும் அதிருப்தியாலும் எதிர்ப்புப் போராட்டங்களினாலும் நிர்ப்பந்திக்கப்பட்டதால் தான் இவர்களும் இவ்வுண்மையை ஒப்புக்கொண்டு, ‘தடையில்லா தேர்ச்சிமுறையை’ நீக்கி, தேர்வின் அடிப்படையிலான பாஸ்–ஃபெயில் முறையை மீண்டும் புகுத்துவதைப்பற்றி பேசத்துவங்கியுள்ளனர். ஆனால், சமீபத்திய அறிக்கைகளின் படி, பாஜக மத்திய அரசாங்கம் பல்வேறு மாநில அரசாங்கங்களிடையே கருத்து வேறுபாடுகள் நிலவுகின்றன எனக்கூறி அவற்றை ஆய்வுசெய்ய புதிதாக ஒரு குழு அமைத்திருக்கின்றது. இவ்வாறு, கல்வியை நாசமாக்கிய இந்த முறையை மாற்றுவதில் இவர்களும் காலம் தாழ்த்துகின்றனர்.

இந்தச் சூழ்நிலையில்தான் நாடெங்கிலும் அதிருப்தி கொண்ட மக்கள் தங்கள் குரலை உரக்க எழுப்பினர். நவம்பர் 26, 2015 அன்று கொல்கத்தாவில் மாபெரும் சட்ட மறுப்பு போராட்டத்தை அகில இந்திய ஜனநாயக மாணவர் சங்கமும் (AIDSO) அகில இந்திய ஜனநாயக இளைஞர் சங்கமும் (AIDYO) இணைந்து அறிவித்தன. முன்கூட்டியே இப்போராட்டம் அறிவிக்கப்பட்டிருந்த போதிலும் கொல்கத்தா காவல்துறையினர் ஊர்வலத்திற்கு தடைவிதித்தனர். வழக்கமாக இத்தகைய ஊர்வலங்கள் சென்று முடிவடையும் கிழக்கு எஸ்பிளனேட் பகுதிக்கு செல்ல அனுமதிக்கவில்லை. ஆயினும் உறுதி கொண்ட சுமார் 4,000 மாணவர்களும் இளைஞர்களும் ஊர்வலத்தில் பங்குகொண்டு அப்போராடத்தை வெற்றிகரமாக நடத்தினர். காவல்துறை இவர்கள் மீது தடியடி நடத்தி கைது செய்தது. மருத்துவமனையில் சேர்க்கவேண்டிய அளவிற்கு பலர் கடுமையாகக் காயமுற்றனர்.

நாட்டின் மறுபுறத்தில், தலைநகர் டெல்லி ஜந்தர் மந்தரில் நவம்பர் 23, 2015 அன்று, அகில இந்திய கல்விப் பாதுகாப்புக் கமிட்டியின் (AISEC) தலைமையில் சான்றோர்களும் கல்வியாளர்களும் அகில இந்திய எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தை நடத்தினர்.




தடையற்ற தேர்ச்சிக் கொள்கையை எதிர்த்து அகில இந்திய கல்விப் பாதுகாப்பு கமிட்டி நாடுமுழுவதிலிமிருந்து வந்திருந்த கல்வியாளர்கள் தலைமையில் புதுதில்லியில் பாராளுமன்றம் நோக்கி நவம்பர் 23, 2015யில் நடத்திய பேரணி

இதற்கு முன் நவம்பர் 20ல் நடைபெற்ற பத்திரிகையாளர் சந்திப்பில் இக்கமிட்டியின் மேற்குவங்க செயலாளர் கார்திக் சாகாவும், டெல்லி மாநில தலைவர் நரேந்திர சர்மாவும், செயலாளர், கிர்வார் சிங்கும் மற்றும் பல பிரமுகர்களும் கலந்து கொண்டனர். பேரணியில் பல்வேறு மாநிலங்களைச் சேர்ந்த கல்வியாளர்களும் மாணவர்களும் பெற்றோர்களும் பள்ளிகள், கல்லூரிகளிலிருந்து ஆசிரியர்களும் பங்குகொண்டனர். டெல்லி, ஆந்திர பிரதேஷ்–தெலுங்கானா, அஸ்ஸாம், பீஹார், குஜராத், ஹரியானா, ஜார்க்கண்ட், கர்நாடகா, கேரளா, மத்திய பிரதேசம், மஹாராஷ்டிரா, ஓரிசா, பஞ்சாப், மேற்கு வங்கம், உத்தர பிரதேசம் மற்றும் பல மாநிலங்களிலிருந்து பிரதிநிதிகள் கலந்து கொண்டனர். தமிழ்நாட்டிலிருந்து கல்விப்பாதுகாப்பு கமிட்டியின் கன்வீனரும் மற்றும் பிரதிநிதிகள் பதாகைகளை ஏந்தி பேரணியில் பங்கு கொண்டனர். மிகவும் கட்டுப்பாடும் கோரிக்கை அட்டைகளால் அலங்கரிக்கப்பட்டும் இருந்த பேரணி, ராம்லீலா மைதானத்திலிருந்து ஜந்தர் மந்தர் நோக்கிப் புறப்பட்டது. ஜந்தர் மந்தரில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்திற்குப் பிறகு அகில இந்திய கல்விப்பாதுகாப்பு கமிட்டியின் சார்பில் அதன் பொதுச் செயலாளர் டாக்டர் ஏ கே ராய், பீகாரின் சாதனா மிஸ்ரா, தமிழ்நாட்டின் எஸ் ஹெச் திலகர் ஆகியோர் அடங்கிய குழு, மத்திய மனிதவள மேம்பாட்டுத் துறை அமைச்சர் அலுவலகத்தில் மனு ஒன்றை சமர்ப்பித்தனர். அமைச்சரைச் சந்திக்க முன்கூட்டியே அனுமதி கோரியிருந்த போதிலும், அமைச்சரோ பொறுப்புள்ள அதிகாரியோ இக்குழுவை சந்திப்பதை தவிர்த்தனர்.

அந்த மனுவில், தடையில்லா தேர்ச்சி முறையை நீக்கி, மீண்டும் பாஸ்–ஃபெயில் முறையை புகுத்த வேண்டும், கல்வியை தனியார்மயமாக்குவதையும் வியாபாரமாக்குவதையும் உடனடியாக நிறுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்ளப்பட்டிருந்தது. மேலும், பல்வேறு நாடுகளில் சேவைத்துறைகளை, அதில் ஒன்றாகக் கருதப்படும் கல்வியை வியாபாரத் துறையாக மாற்றவேண்டும் என உலக வர்த்தக நிறுவனமும் காட் ஒப்பந்தமும் (WTO-GATS) நிர்ப்பந்தித்து வருகின்றன. அவ்வொப்பந்தத்தில் கல்வி நிறுவனங்களைச் சேர்க்க இந்தியா தயாராக இருப்பதைக் கண்டித்து அதனைக் கைவிடவேண்டும் என்றும் அம்மனுவில்கேட்டுக் கொள்ளப்பட்டது. பாடத்திட்டங்களில் மதச்சார்பற்ற, ஜனநாயக, அறிவியல்பூர்வ சாராம்சங்களை அகற்றி, கண்மூடித்தனமான பழமைவாத கருத்துக்களைப் புகுத்தி, கல்வியை காவிமயமாக்குவதையும் மதமயமாக்குவதையும் உடனே நிறுத்தவேண்டும், மாநில அரசாங்கங்கள், மாநில கல்வி வாரியங்கள் ஆகியவற்றின் சுயாட்சி உரிமைகள் மீதான தாக்குதல்களை நிறுத்த வேண்டும், ஆராய்ச்சிக்கான அகில இந்திய தகுதித் தேர்வில் (NET) பங்கேற்காமல் பல்வேறு பல்கலைக் கழகங்களில் ஆராய்ச்சிகளில் ஈடுபட்டிருக்கும் மாணவர்களின் பெயர்களையும் ஸ்காலர்ஷிப் தொகையையும் இதுவரை வழங்கிவந்த பல்கலைக் கழக மானியக் குழுவின் பட்டியலிலிருந்து நீக்கி, இனி அத்தொகை மாணவர்களுக்கு கிடைக்காது எனப் பிறப்பிக்கப்பட்ட உத்தரவை உடனே திரும்பப் பெறவேண்டும் போன்ற பல கல்விக் கோரிக்கைகளும் அம்மனுவில் கோரப்பட்டன.

ஜந்தர் மந்தரில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில் கொல்கத்தா பல்கலைக்கழக நிலயியல்துறை முன்னாள் பேராசிரியர் திருபா முகர்ஜி சிறப்புரையாற்றினார். மேலும், அஸ்ஸாமின் கோல்பாரா கல்லூரி ஆங்கிலத்துறை பேராசிரியர் ஜாய்நல் அபெதின், கர்நாடகா மாநில சட்டப் பல்கலைக் கழக முன்னாள் துணைவேந்தர் ஜே எஸ் பாட்டில், டெல்லி ஜவஹர்லால் நேரு பல்கலைக்கழக மேற்காசிய ஆராய்ச்சி மைய பேராசிரியர் ஏ கே ராமகிருஷ்ணன், டெல்லி பல்கலைக்கழக பேராசிரியர்கள் சங்கத் (DUTA) தலைவர் பேரா நந்திதா நாராயண், அஸ்ஸாமிலிருந்து பேரா பி மஹாபத்ரா, மத்தியப் பிரதேசத்திலிருந்து பேரா ராமாவதார் சர்மா, ஜார்கண்டின் சுமித் ராய், கர்நாடகாவின் திருமதி கே உமா, பஞ்சாபின் அமிந்தர்பால் சிங், ஆந்திரா–தெலங்கானா சார்பில் பேரா என் சந்திரசேகர், உ பியின் டாக்டர் சந்திரவாண் யாதவ், மேற்கு வங்க AISEC மாநிலச் செயலாளர் கே சாகா, அகில இந்திய பொதுச் செயலாளர் ஏகே ரே மற்றும் பலர் இவ்வார்ப்பாட்டத்தில் உரையாற்றினர். டெல்லி பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த ஜாகிர் உசைன் கல்லூரியின் முன்னாள் பேராசிரியர் நரேந்திர சர்மா ஆர்ப்பாட்டத்திற்கு தலைமை தாங்கினார். பங்கு கொண்டு உரையாற்றிய அனைவரும் கல்விமீது தொடுக்கப்பட்டு வரும் மோசமான பல்வேறு தாக்குதல்களை கவலையுடன் எடுத்துரைத்தனர். மத்திய அரசாங்கம் இவைகுறித்து தக்க நடவடிக்கை எடுக்கத்தவறினால் போராட்டத்தை அடுத்த உச்சத்திற்கு எடுத்துச் செல்வதைத்தவிர தமக்கு வேறுவழியில்லை என அகில இந்திய கல்விப்பாதுகாப்புக் கமிட்டி உறுப்பினர்கள் உறுதி பட சூளுரைத்தனர். அத்தகைய நாடுதழுவிய பேரியக்கத்தில் கல்வியாளர்களும் ஆசிரியப் பெருமக்களும் மாணவர்களும் மட்டுமின்றி கல்வியைக் காப்பாற்ற அனைத்துத் தரப்புப் பொதுமக்களும் கலந்துகொள்ளவேண்டும் எனவும் அவர்கள் அறைகூவல் விடுத்தனர்.

சோசலிஸ்ட் யூனிடி சென்டர் ஆஃப் இந்தியா, தமிழ்நாடு மாநில அமைப்புக் கமிட்டிக்காக, அச்சிட்டு–வெளியிடுபவர்: வி பி நந்தகுமார் , அலுவலகம் : பு எண் 16 (ப எண் 18), இராட்லர் தெரு, சூளை, சென்னை 600 112 அச்சகம் : அய்யனார் ஆப்செட் எண் 10, சுப்பாராவ் நகர், சூளைமேடு, சென்னை 600 094, ஆசிரியர்: வி பி நந்தகுமார்
Published by: V P Nandakumar on behalf of Socialist Unity Centre of India, Tamilnadu State Organising Committee, from New No16 (Old No18), Rotler Street, Choolai, Chennai 600 112 and Printed at Aiyanar Offset, No.10, Subha Rao Nagar, Choolaimedu, Chennai 600 094. Editor : V P Nandakumar
Tel : 044 - 2643 3169, 94445 51930 Email : suci_tn@yahoo.com Please visit our Website : www.sucicommunist.org